(12)

# திடீர் விநாயகர் சிலை: ஹெட்கான்ஸ்டபிள் மீது நடவடிக்கை

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் : 49
போன் : 389
மலர் 12
இதழ் 242
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் புரட்டாதி 25 ஷஃபான் 9 ஞாயிற்றுக்கிழமை (11-10-70)

தீபாவளி
மலிவு விற்பனை
(9-10-70 — 29-10-70)
உங்கள்
தீபாவளி ஜவுளிகளை
பூர்த்தி செய்துகொள்ள
அரிய சந்தர்ப்பம்!
விக்னேஸ்வரா
புடவை மாளிகை
பஸ் நிலையம் முன்; யாழ்ப்பாணம்.

சென்னை, அக். 10

தியாகராஜ நகரில் திடீரென விநாயகர் சிலையொன்று தோன்றியதற்கு அப்பகுதியைச்சேர்ந்த பொலிஸ் ஹெட்கான்ஸ்டபிள் ஒருவர் தான் காரணமென்று இப்பொழுது தெரியவந்துள்ளதாம்.

விநாயகர் சிலையொன்றை விலைக்குவாங்கி இந்த ஹெட் கான்ஸ்டபின் குறிப்பிட்ட இடத்தில் வைத்தார் என்றும் அச்சிலையை விற்றவரே அதனைப் பார்த்துவிட்டு உறுதிசெய்துள்ளான் என்றும் பொலிஸார் கூறினார்கள்.

முஸ்லிம் மசூதியொன்று கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் கடந்த மாதம் 9-ந் திகதி விநாயகர் விக்கிரகம் ஒன்று திடீரென தோன்றியது. இந்தச் சிலை தானாகவே தோன்றியிருப்பதாக ஒருசாராரும் வேண்டுமென்றே யாரோ கொண்டு வந்து வைத்திருக்கவேண்டுமென்று இன்னொரு சாராரும் தெரிவித்துவந்தனர். இன்னொரு மதத்தவருக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் விநாயகர் விக்கிரகம் ஒன்று தோன்றியிருப்பதால் இந்தப் பிரச்னை மதப்பூசல் ஒன்றினைக்கிளப்பிவிடுமோ என்றும் அஞ்சப்பட்டது. இதன் காரணமாக இதுபற்றி விரிவாகஆராய்ந்துநடவடிக்கை எடுக்கும்படி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டிருந்தது இதன் பேரில் பொலிஸ் அதிகாரிகள்மேற்கொண்டபுலன் விசாரணைகளின் பயனாக, அப்பகுதியிலுள்ள ஹெட் கான்ஸ்டபிள் ஒருவர்மீது பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

இந்த அதிகாரி விநாயக பக்தர் என்றும் வேறொரு கோவிலுக்கும் விநாயகர் சிலையொன்றைதம்செலவில் வாங்கிக் கொடுத்திருக்கிறார் என்றும் தெரியவந்துள்ளது மசூதி கட்டுவதற்குஒதுக்கப் பட்ட இடத்தில் விநாயகர் சிலையொன்றைவைப்பதற்கு இவர் திட்டமிட்டிருந்தார் என்றும் இத்திட்டத்தை நிறைவேற்றும்வகையில் ஒரு சிலையை விலைகொடுத்து வாங்கி அந்த இடத்தில் வைத்திருக்கிறார் என்றும் தெரியவந்துள்ளதாம். சிலை தானே தோன்றியதாக பிறரை நம்பச்செய்வதற்காக அந்த இடததில் மின்வெட்டுபோல் வெளிச்சத்தை ஏற்படுத்தியதுடன் வெடியொன்றைப் போட்டு வேட்டு சப்தம் ஒன்றையும் ஏற்படுத்தியிருக்கிறார் என்றும் பொலிசார் கூறினார்கள். இந்த அதிகாரிமீதுஇப்பொழுது நடவடிக்கைஎடுக்கப்படுகின்றது.

# வடக்கிலும் கொலைச் சம்பவங்கள் அதிகரிப்பு; 9 மாதத்தில் 40 கொலைகள்

## 'பொதுமக்கள் ஒத்துழைத்தால் தடுக்கலாம்' - பொலிஸ் அதிபர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்த ஒன்பது மாதங்களில் வடமாகாணத்தில் நாற்பது கொலைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இது சென்ற வருடத்தில் இதே காலத்தில்நடந்த கொலைச் சம்பவங்களைவிட சிறிது அதிகமாகும். சென்ற வருடத்தில் முதல் ஒன்பது மாத காலத்தில் வடபகுதியில் 36 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. கொலை முதலிய குற்றச் செயல்கள் நடைபெறாமல் தடுப்பதற்கும் அவை அதிகரிக்காமல் கட்டுப்படுத்துவதற்கும் பொதுமக்கள் பொலிசாருக்கு ஒத்துழைப்...

40 கொலைச் சம்பவங்களில் எட்டுக் கொலைகளில் தான் துப்பாக்கி பாவிக்கப்பட்டிருக்கிறது. இதர கொலைகளில் பொல்லுகள். தடிகள், கத்தி, கோடரி, கல்லுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன. துப்பாக்கி பாவிக்கப்பட்ட கொலைகள் யாவும் முன்னரே திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்ட கொலைகள் என்று கணிக்கப்பட்டுள்ளன.

ம[illegible]வெறி, குடும்பச் சச்சரவு, காணித் தகராறு, பழைய கோபம் சடுதியாக ஏற்பட்ட ஆத்திரம் ஆகியவை [illegible] காரண[illegible] றன [illegible]வென்று தெரியவந்துள்ளது...

தமாக இதுவரை கொலைகாரர் எவரும் அகப்படவில்லை. பளையிலும் பூநகரியிலும் அரியாலையிலும்நடைபெற்ற கொலைச்சம்பவங்களேஇவை

கொலை செய்யப்பட்டவர்களில் மன்னாரில் 72 வயது மூதாட்டியும், திருநெல்வேலியில் உதயன் என்ற 6 வயதுச் சிறுவனும் வயதில் கூடியவரும் வயதில் குறைந்தவர்களுமாவர்

40 கொலைகளில் ஒன்றுதான் கொள்ளை சம்ப[illegible]மாக நடைபெற்ற கொலையாகும்

பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஒரு கொலையும் தேர்தலுக்குப் பின்னர் ஒரு கொலையும் தேர்தல் ...

## கல்வி அமைச்சருக்கு எம். பி. யின் புகார்

வேலணை, சனி

கல்வி அமைச்சு பல வழிகளில் தமிழையும் தமிழரையும் புறக்கணிக்கிறது. தமிழ்ப் பாடசாலைகளின் குறைகளைக் கவனிக்கவோ தமிழ் ஆசிரியர்களின் முறையீடுகளைக் கவனிக்கவோ தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களையும், பரிவுரைகளையும் கவனிக்கவோ தமிழறிந்த தமிழ் பகுதிகளின் நிலைமை தெரிந்த தமிழ் மக்களின் கல்வியில் நாட்டமுடைய உயர் உத்தியோகஸ்தர் ஒருவரேனும் தங்கள் அமைச்சில் இல்லை.

கல்வி சுற்றறிக்கையில் தமிழ் எழுத்துப்பிழை இருப்பது குறித்து கல்வி மந்... இரத்தினம் எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அக்கடிதத்தில் மேலும் கூறியிருப்பதாவது: தமிழுக்கும் தமிழ்ப் பாடசாலைக்கும் பொறுப்புவாய்ந்த தகுதியான உயர் உத்தியோகஸ்தர் இல்லாமையாலே தமிழ் மக்களுக்கு வேதனையும் வெறுப்பையும் உண்டாக்கும் செயல் தங்கள் அமைச்சில் நடைபெறுகிறது. அண்மையில் வெளியான சுற்றறிக்கையில் தமிழ் கொலை செய்யப்பட்டுள்ளது ஏறக்குறைய ஒவ்வொருவரியிலும் எழுத்துப்பிழைகளும் பிற பிழைகளும் இருக்கின்றன. உங்கள் அமைச்சு ...

## சோல்பரி கடும் சுகவீனம்

லண்டன், அக். 10

இலங்கையின் முன்னாள் கவர்னர் ஜெனரல் சோல்பரி பிரபு பேசுவதற்குக்கூட மிகவும் கஷ்டப்படும் நிலையில் சுகவீனமுற்றிருக்கிறார் அவருக்கு இப்பொழுது 83 வயதாகின்றது

கடந்த சில வருடங்களாக சோல்பரி பிரபு தனது மகளுடன் வாழ்ந்துவருகிறார். அடிசன் ரோட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அண்மையிலுள்ள கொலன்பாக் அடிசன் அவென்யூவிலேயே அவ்வில்லம் இருக்கிறது.

கடைசியாக 1964-ம் ஆண்டே இலங்கையில் சோல்பரிப் பிரபு இருந்தார் இவர் கலந்து கொண்ட கடைசிப் பொது வைபவம் இவ் வாண்டிலேயே நடந்தது. பின்பு இவர் அக்ஸ் ...

## தி. மு. க. தீர்மானத்தை சிண்டிக்கேட் ஆதரிக்குமா? கருணாநிதி கேள்வி

சென்னை, அக் 10

மாநில அமைச்சரவைகளைக் கவிழ்ப்பதற்கான மத்திய அரசு அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் மசோதா கொண்டுவருவதென்ற தம் யோசனைக்கு பழைய காங்கிரஸ்தலைவர் திரு. ராம் சுபாக்சிங் ஆதரவளிக்க முன்வந்திருப்பதைக் குறித்து முதல்மந்திரி கருணாநிதி இன்று மகிழ்ச்சி தெரிவித்தார். இப்பிரச்னை குறித்து தம் கட்சிக் குழுவுடனும் தி: மு.க. எம். பிக்களுடனும் விரைவில் ஆலோசனை கலந்து முடிவெடுக்கப்படுமென்று திரு கருணாநிதி தெரிவித்தார்.

சைதாப்பேட்டையில் அண்ணாதுரை பிறந்த நாளையொட்டி நடந்த பொதுக் ...

அரசியல் சட்டத்தின் 356 வது பிரிவின்படி மாநில சட்டசபைகளைக் கலைத்தோ அல்லது செயல் படவிடாமல் தற்காலிகமாக தடுத்துவிடலாம் என்ற நிலையில் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கவும் கவர்னர்தமது எண்ணப்படி அதற்கான சிபார்சு செய்யலாம் என்றும் இருக்கின்ற அதிகாரத்தை மாற்ற அரசியல் சட்டத்தை திருத்த வேண்டும் என்றும், அதற்கு தி. மு. கழகம் முடிவெடுத்து பார்லிமெண்டில் தீர்மானம் கொண்டுவந்தால் இதர கட்சிகள் ஆதரிக்குமா என்றும் நான் குறிப்பிட்டு இருந்ததையொட்டி பழைய காங்கிரஸ் தலைவர் திரு. ராம். சுபாக் சிங் வரவேற்று இருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் கல்வியில் நாட்டமுடைய உயர் உத்தியோகஸ்தர் ஒருவரேனும் தங்கள் அமைச்சில் இல்லை.

கல்வி சுற்றறிக்கையில் தமிழ் எழுத்துப் பிழை இருப்பது குறித்து கல்வி மந்திரி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்துக்கு ஊர்காவற்றுறை ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. ... கிறது. அண்மையில் வெளியான சுற்றறிக்கையில் தமிழ் கொலை செய்யப்பட்டுள்ளது ஏறக்குறைய ஒவ்வொருவரியிலும் எழுத்துப்பிழைகளும் பிற பிழைகளும் இருக்கின்றன. உங்கள் அமைச்சு தமிழ் மொழியை எவ்வாறு புறக்கணிக்கிறது என்பதை எடுத்துக் காட்ட இச் சுற்றறிக்கையே போதுமானது

...யில் 36 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

கொலை முதலிய குற்றச் செயல்கள் நடைபெருமல் தடுப்பதற்கும் அவை அதிகரிக்காமல் கட்டுப்படுத்துவதற்கும் பொதுமக்கள் பொலிசாருக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும் என்று வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ம... வெறி, குடும்பச் சச்சரவு, காணித் தகராறு, பழைய கோபம் சடுதியாக ஏற்பட்ட ஆத்திரம் ஆகியவை இக்கொலைகளுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன ...வென்று தெரியவந்துள்ளது.

**கொலைகாரர் பிடிபடவில்லை**

மூன்று கொலைகள் சம்பந்...

40 கொலைகளில் ஒன்று தான் கொள்ளை சம்ப...மாக நடைபெற்ற கொலையாகும்

பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஒரு கொலையும் தேர்தலுக்குப் பின்னர் ஒரு கொலையும் தேர்தல் ...வங்களுடன் தொடர்புடையதாக நடைபெற்ற இரு கொலைகளாகும்.

...றது,

கடைசியாக 1964-ம் ஆண்டே இலங்கையில் சோல்பரிப் பிரபு இருந்தார் இவர் கலந்து கொண்ட கடைசிப் பொது வைபவம் இவ் வாண்டிலேயே நடந்தது. பின்பு இவர் அக்ஸ்போட் பல்கலைக் கல்லூரியின் கௌரவ அங்கத்தவராய் இருந்தார்.

1966-ம் ஆண்டு சிறு நோயால் முதலில் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இதே வருடத்தில் நரம்புத் தளர்ச்சி காரணமாக சருமவியாதியால் பாதிக்கப்பட்டார். இந் நோயினுல் பாதிக்கப்

...தி.மு.க. எம். பிக்களுடனும் விரைவில் ஆலோசனை கலந்து முடிவெடுக்கப்படுமென்று திரு கருணாநிதி தெரிவித்தார்.

சைதாப்பேட்டையில் அண்ணாதுரை பிறந்த நாளையொட்டி நடந்த பொதுக் கூட்டத்தில் திரு கருணாநிதி இதைப்பற்றி குறிப்பிட்டார.

திரு. கருணாநிதி பேசிய தன் கருத்து!

தி.மு.கழகம் முடிவெடுத்து பார்லிமெண்டில் தீர்மானம் கொண்டுவந்தால் இதர கட்சிகள் ஆதரிக்குமா என்றும் நான் குறிப்பிட்டு இருந்ததையொட்டி பழைய காங்கிரஸ் தலைவர் திரு. ராம். சுபாக் சிங் வரவேற்று இருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இது எங்கள் கழகம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென் வற்புறுத்தி வரும் கொள்கைக்கு ஆக்கமளிப்பதாகும். 356வது பிரிவு போன்றவைகளை மத்திய அரசின் ஆதிக்க செயல்களுக்காக அரசியல் சட்டத்தில் வைத்திருக்கும் வரையில் மத்திய ஆட்சியில் யார் பிரதமராக இருந்தாலும் தங்களுக்குத் தேவைப்படும் போது அதனை பயன்படுத்தவே செய்வார். இந்த 23 ஆண்டுகளில் இப்படி எத்தனையோ மாநில சட்ட மன்றங்கள் கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டது. அதனுல் இப்போது உள்ள பிரச்னை காளி கோவிலுக்குப் பூசாரி சாரி யார் என்பது அல்ல அந்தப் பூசாரி காளிக்கு ஆடு மாடுகளை பலியிடுவதைத் தடுப்பதற்கு என்ன வழி என்பது தான் ஜீவாஹிம்சை தடைச்சட்டப்படி கோயில்களில் பலியிடுவது தடுக்கப்பட்டு விட்டது, பூசாரி காளியம்மனுக்கு கடாவெட்டி பூசைபோடுவதில்லை அதுபோல மாநில அரசுகளை நினைத்தபடி கவிழ்க்க பயன்படும் 356 வது பிரிவு தக்கவகையில் திருத்தப்படவேண்டும், பிரச்னை

(4-ம் பக்கம் பார்க்க)

படுவதற்கு முன் 2 வது திருமண காலத்தில் மிகவும் மகிழ்ச்சிஉடையவராயும் கவர்ச்சி உடையவராயும் காணப்பட்டார்.

# ‘பல்கலைக்கழக மருத்துவ பகுதிக்கு இன அடிப்படையில் தெரிவு

## யாழ். பெற்றேர் சங்கம் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவப் பகுதிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யப்பட்டதில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும் திறமைக்கு இடமளிக்காமல் இன அடிப்படையில் மருத்துவம் பகுதிக்கு மாணவர் தெரிவு நடைபெற்றிருப்பதாயும் யாழ்ப்பாணம் பெற்றேர் சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளதுடன் இதுசம்பந்தமாகக் காட்டப்பட்டப் பாரபட்சத்தை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்

(4-ம்பக்கம் பார்க்க)

## பக்தவத்சலத்துக்கு கருணாநிதி பொன்னடை!

சென்னை, ஒக். 1?

தமிழக முன்னள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலத்தின் 74-வது ஆண்டு பூர்த்திவிழா இன்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் முதலமைச்சர் திரு மு கருணாநிதி திரு. பக்தவத்சலத்துக்கு பொன்னடை போர்த்திக் கௌரவித்தார்.

பொன்னடை போர்த்திக் கௌரவிக்கும்போது திரு. பக்தவத்சலத்திடமிருந்து சில காரியங்களையும் கருத்துக்களையும் நாம் பின்பற்ற வேண்டுமென்று தெரிவித்தார்.

திரு. சி சுப்பிரமணியம், அகிலன், திரு. மா. பொ. சிவஞானகிராமணியார் முதலியோரும்பேசினர்கள்.

பக்தவத்சலம் பேசுகையில், வாழ்க்கையில் தவறு செய்யாமல் வாழ நீங்கள் ஆசி தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

## உதவி கல்வி மந்திரி யாழ்ப்பாண விஜயம்

புத்தூர், ஞாயிறு உதவிக் கல்விமந்திரி திரு. பி. வை. துடாவ வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் அழைப்பின் பேரில் இம் மாதம் 12ம் திகதி யாழ்ப்பாணம் விஜயம்செய்கிறார். வடமகாண ஆசிரிய சங்கத்தின் பொன்விழா வைபவங்களில் கலந்து கொள்ளவே உதவி கல்வி மந்திரி இங்கு வருகிறார்.

21ம திகதி காலை 10 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடக்கவிருக்கும் பொன்விழா வைபவத்தில் கலந்துகொண்டு அதன்பின் அவர்களால் நடத்தப்படும் மதியபோசன விருந்தில் விசேட விருந்தினராக கலந்து கொள்ளார்.

அவர் மாலை 8 மணிவரை சங்க உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுவார். இதற்கான ஏற்பாடுகளை வடமாகாண ஆசிரிய சங்கத் தலைவர் திரு க மகாலிங்கசிவமும், காரியதரிசி திரு எஸ். சபாநடேசனும் துரிதமாக செய்து வருகின்றனர்.

இந்த வைபவத்தையொட்டி வடமாகாண ஆசிரிய சங்கத்தின் சஞ்சிகையான ‘ஆசிரிய உலகம்’ ஆசிரியர் திரு. கல்யாணசுந்தரேசனுல் வெளியிட்டு வைக்கப்படும்.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE-DOLLAR



யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த திருமதிமங்கையற்கரசி இராஜதுரையின் இல்லத்தில் கொண்டாடப்பட்ட நவராத்திரி பூசையின்போது பிடிக்கப்பட்ட படம். பொயமைக் கொலுவுக்கு மேலே முச்சக்திகளும் விளங்குகின்றனர்.

படம்: (சிட்டு)

## யு. எஸ். குற்றச்சாட்டுக்கு சோவியத் மறுப்பு

மாஸ்கோ, அக் 13

மேற்காசியப் போர் ஓய்வை ரஷ்யா மீறுவதாக அமெரிக்கா சுமத்திய குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது. அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. றேஜெர்ஸ் சோவியத் யூனியன்மீது சுமத்திய குற்றச்சாட்டு வெளிவந்த ஒரு சில மணி நேரத்துக்குள் இம் மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூயஸ்கால்வாயின் எகிப்திய பகுதிகளில் சோவியத் யூனியனுல் நிறுவிக் கொடுக்கப்பட்ட தரையில் இருந்து வான்நோக்கிச் செல்லும் ஏவுகணைத் தளங்களில் இருந்து அவற்றை சோவியத் யூனியன் நிபுணர்கள் இயக்குகிறார்கள் என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டு கற்பனையானதுமட்டுமல்ல. உண்மைக்குப் புறம்பானதுமாகும் என சோவியத் யூனியன் செய்தி நிறுவனமான டாஸ் தெரிவித்தது.

அது மேலும் தெரிவித்ததாவது: ...

...கும் அரணகளையும் மற்றும் இராணுவ எதிர்ப்புக்களை மறைப்பதற்காகவே இக்குற்றச்சாட்டை அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கியூபாவில் சோவியத்யூனியன் நீர்மூழ்கித்தளத்தை அமைக்கவிருக்கிற தென்ற அமெரிக்காவின் யூகச் செய்தி ஆயுதப் போட்டிக்கு வழிவகுக்குமே தவிர வேறல்ல. கியூபாவில் நீர்மூழ்கித்தளம் அமைக்கும் நோக்கம் சோவியத் யூனியனுக்குக் கிடையாது என சோவியத் பத்திரிகைக் கட்டுரையின் ஆசிரியர் கூறியுள்ளார்.

மேலும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளதாவது. 1962-ம் ஆண்டு அமெரிக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திலிருந்து சோவியத் யூனியன் சிறிதும் விலகவில்லை அவ்வொப்பந்தத்தை சிறிதும் பிசகாத வகையில் உறுதியுடன் கடைப்பிடித்து வருகிறது என அக்கட்டுரை ஆசிரியர் மேலும் கூறியுள்ளார்.

வடபகுதி

## அசைஸ் விசாரணைகள் இன்றுடன் முடிவடையும்

யாழ்ப்பாணம், ஞாயிறு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் இரண்டாவது பருவகால விசாரணையுடன் முடிவடைந்திருக்கிறது. நீதியரசர் ஓ' எல். டி. கிரெட்ஸர் முன்னிலையில் இன்று நண்பகல் விசாரணை முடிவடையும் வைபவம் நடைபெறும். வழக்கறிஞர்களும் நீதிமன்ற உத்தியோகத்தர்களும் இவ்வைபவத்தில் கலந்து கொள்வார்கள்.

இப்பருவகால விசாரணையின்போது 27 வழக்குகள் விசாரணை செய்யப்பட்டன. இவற்றில் 14 கொலைவழக்குகள், 12 கொலை முயற்சி வழக்குகள், ஒன்று ...லாத்கார வழக்கு.

வவுனியா கொலை வழக்கும் உடுப்பிட்டி கொலை வழக்கும் அடுத்த பருவகால விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டது, மந்துவில் கொலை வழக்கு கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

இப்பருவகால விசாரணைகள் ஆரம்பத்தில் நீதியரசர் ஏ. எல். எஸ். சிறிமானே முன்னிலையிலும் பின்னர் நீதியரசர் ஓ' எல். டி. கிரெட்டர் முன்னிலையிலும் விசாரணை செய்யப்பட்டன.

புளியங்கூடல் கொலை முயற்சி வழக்கு

## ‘முதலாம் எதிரி கையில் கத்தி வைத்திருந்ததை நான் கண்டேன்’

யாழ்ப்பாணம், ஞாயிறு முதலாம் எதிரி என்னிலும்பார்க்க எத்தனை வயது மூத்தவர் என்பது எனக்குத் தெரியாது. அவர் தான் எனக்கு கத்தியால் குத்தினுர் 1-ம் எதிரி கடந்த 15 நாட்களாகத்தான் தடியூன்றி நடக்கிறார். அதற்கு முன் நல்லாயிருந்தார்,

ஊர்காவற்றுறை கொலை முயற்சி வழக்கில் எதிரிகளின் வழக்கறிஞரால்குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த அப்புத்துரை மேற்கண்டவாறு கூறினுர், இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் ...கார்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி கிரெட்ஸர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் புளியங்கூடலில் 69-ம் ஆண்டு மார்ச் 10-ம் தேதி தில்லையம்பலம்யிடம் அப்பாத்துரையை கொலை செய்ய முயற்சித்ததாக வீரகத்தி சின்னத்துரை, சின்னத்துரை கந்தசாமி, சின்னத்துரை தம்பிஐயா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினம். புறக்டா ஆர். ஜே. செல்வரத்தினததின் அனுசரணையுடன் ஆஜரானுர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் கே. குணரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார்.

அப்பாத்துரை குறுக்கு விசாரணையில் தொடர்ந்து கூறியதாவது: வாக்குவாதத்தின்போது முதலாம் எதிரி கையில் கத்தி வைத்திருந்ததை நான் கண்டேன். மரண விசாரணை அதிகாரி வாக்கு மூலமளித்தது பற்றி எனக்கு தெரியாது.

வழ: கீழ்க்கோர்ட்டில் 1-ம் எதிரி கையில் கத்தி வைத்திருந்ததை கவனிக்கவில்லைஎன்றீரா? எனக்கு ஞாபகமில்லை.

வழ: நீர் கடை ஒன்றை நடத்தினீர்? ஆம்.

வழ: இப்ப நடத்துவதில்லை? இல்லை,

வழ: கணபதிப்பிள்ளை என்பவருக்கு அடித்ததாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் நீர் குற்றப் பட்டீரா? ஞாபகமில்லை.

வழ: 20 ரூபா அபராதம் கிடைத்தது? இல்லை.

மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் சாட்சியமளித்தார், விசாரணை இன்றுகாலை வரை ஒத்திபோடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நவாலியில் 3 1/2, 4 1/2 பரப்புக்கொண்ட ஆறு கட்டிடக் காணித் துண்டுகள் பிரதான வீதிக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும். L. S. C. கனகசிங்கம், சாமியல் மான் வீதி, உடுவில். 2322

### தேவை

யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள செபஸ்ரியன்ஸ் புடவை ஸ்தாபனத்திற்கு அனுபவம் வாய்ந்த சமயற்காரர் ஒருவர் உடனே தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். 2327

பகுதி நேரக் கணக்கப்பிள்ளை தேவை. தொடர்பு கொள்ளவும். லிங்கம் கொம்பனி 21/4 ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 2310

நான்கு/ ஐந்து போத்தல் பால் தரக்கூடிய சாதுக் கலவன் பசு கன்றுடன் உடனே தேவை. ப. நாகராஜா, மனேச்சர், லான்ட் இன்வெஸ்மென்ட், 6 மெயின் வீதி, யாழ்ப்பாணம் 2326

அப்பளம் தயாரிப்பாளர் தேவை. 15-10-70 வியாழக்கிழமைக்கு முன்னதாக நேரில் வரவும். திறமைசாலிகளுக்கு முதலிடம் அளிக்கப்படும். சுதர்சனன் இன்டஸ்றீஸ், 217/3, கடைச்சாமி கோயில் லேன், நீராவியடி, யாழ்ப்பாணம், 2321

MITE ORGANIZATION 1967

### வேலையாட்கள் உடனே தேவை

மேசன் வேலை, தச்சுவேலை, இரும்புக்கம்பி வேலைகளில் முதிர்ந்த அனுபவமுள்ள வேலையாட்கள் உடனே தேவை. நற்சாட்சிகளுடன் நேரில் விண்ணப்பிக்கவும். சாதாரண கூலியாட்கள் தேவையில்லை.

வேலைத்தலப் பரிபாலகர்

**மயிற் தாபனம்**

யா. மா. ச. மத்தியசந்தை, பெரிய கடை, யாழ்ப்பாணம் 2506


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**ஞயிறு 11-10-70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரை இசை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர் விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-35 பெண்ணுலகம், 7-00 திரைகானம், 7-15 சித்திரம் 7-45 வாத்திய இசை 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு


**வெஸ்லிசினிமா**

மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
மனோகர்—மணிமாலா
நடித்த
**எதிரிகள் ஜாக்கிரதை**

**ஸ்ரீகாலிங்கன்**

இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
சிவாஜி-பத்மினி
நடித்த
**செந்தாமரை**

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 &9-45 p m
Suz Kendall
James Booth
in
FRAULEIN DOKTOR
(Strictly for Adults)

REGAL
Jaffna
Daily 4-45, 7&9-45p.m.
Poya days 4 Shows
HOW TO SAVE
A MARRIAGE
AND RUIN YOUR LIFE
(Panavision&color)


'திருமுறைகளைப் பிழையின்றிப் பாடக் கூடியவர்களை

# தமிழில் பூசை செய்ய அனுமதிக்க வேண்டும்''

## கொழும்பு நவராத்திரிவிழாவில் தங்கம்மா அப்பாக்குட்டி

வெள்ளவத்தை, சனி

'தமிழிலே திருமுறைகளை ஓதி வழிபாடு செய்வது வரவேற்கவேண்டிய ஒன்ருகும். அப்பரும் சுந்தரரும் பாடி வைத்த தேவாரப் பதிகங்களை இனிய பண்ணேடு பிழைகளின்றிப் பாடக்கூடியவர்களையே தமிழில் பூசை செய்ய அனுமதிக்கவேண்டும். நன்கு தமிழ்க்கற்காதவர்களைப் பூசைசெய்யவிட்டுத் திருமுறைகளின் புனிதத்தன்மையை கெடுக்கக்கூடாது. உள்நாட்டுஇறைவரித் திணைக்கள இந்து மன்றத்தார் கலைமகள் விழாவில் தமிழிலே வழிபாடு நடத்த முன்வந்தமை மிகவும் மெச்சத்தக்க விஷயமாகும்'.

இவ்வாறு செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி கொழும்பு புதியசெயலகக் கட்டிட 6-வது மாடியில் நடைபெற்ற உள்நாட்டு இறைவரித் திணைக்கள இந்து மன்றத்தினரின் கலைமகள் விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து பசியதாவது:-

''எமது சமயகுரவர்கள் இனிய தமிழிலே திருமுறைகளைப் பாடினுர்கள் இறைவனுக்கும் அது விருப்பமாக இருந்தது. பூட்டிய கதவுகளைத் திறக்கவும் திறந்த கதவுகளைப் பூட்டவும் இன்னும் பல்வேறு அதிசயங்களை நிகழ்த்தவும் தமிழிலேதான் பாடினுர்கள்.''

திருமதி ஜெயலட்சுமி கந்தையாவின் மணவிகளின் நடனநிகழ்ச்சியும் பண்ணிசைச் செல்வர் திரு. இராஜசேகரனின் இசைநிகழ்ச்சியும் இடம் பெற்றன.

......

# 'அன்பைக் காணிக்கை செய்வதே பூசையாகும்'

## நவராத்திரி விழாவில் பேச்சு

உடுவில், சனி

தூய்மையுள்ள இடங்களில்தான் கலைத்தெய்வம் நிறைந்திருக்கும் கலைத்தெய்வ வழிபாடு நமது சைவ சமயத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல வைணவர்கள், சமணர்கள் மட்டுமன்றி பௌத்தர்களும்கூட கலைத்தெய்வ வழிபாட்டில் நம்பிக்கையுடையவர்கள் என்பதை சமய சம்பந்தமான கதைகள் கூறுகின்றன. கலைத் தெய்வம் கருணையுள்ளம்படைத்தவள் கலைத்தெய்வத்துடன் அன்பு கொள்ளவேண்டுமாஞல் கல்வியினை சகலரும் தூய்மையுடன் கற்க வேண்டும்,

சுன்ஞகம் ஸ்கந்தவரோயாக் கல்லூரி ஆசிரியர் வித்துவான் திரு' சி' ஆறுமுகம் மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலய சைவ மாணவ மன்றத்திஞல் நடாத்தப்பட்ட கலைவாணி விழாயில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறிஞர்.

பண்டிதர் திரு. எம் கதிரவேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வித்துவான் சி. ஆறுமுகம் மேலும் பேசியதாவது:-

நவராத்திரிவிழா ஒன்பது நாளும் நாம் இறைவிக்கு அமுது நிறையப் படைத்து வழிழிபடுகின்ருேம். உணவு நிறையப் படைத்தலைத்தான் பூசையென்று இன்று நம்மவர்கள் நம்புகிருர்கள், இறைவிக்குத் தேவையானவை அமுதம் அல்ல அன்புதான் தேவை, கலைத் தெய்வ பூசை என்பது அன்பைக் காணிக்கையாகக்குவதேயாகும். கல்வி

திரு. ஏ. மஞேகரன், திரு. கே. சின்னத்துரை ஆகியோரும் பேசினர். சங்கீதபூஷணம் திரு. என் செல்லமுத்துவின் இசை விருந்தும் இடம்பெற்றது.

### இணுவிலில்

இணுவில் சிறீ சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தின் சார்பில் நிலைய மண்டபத்தில் கலைமகள் விழா நடைபெற்றது. இணுவில் தியாகராச சுவாமிகளின் பஜனை, கூட்டுப்பிரார்த்தனை ஆகியன நடைபெற்றன. நிலையத் தலைவர் திரு எம். மடாலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

**இளைஞர்கள் முன்வரவேண்டும்**

ஒவ்வொரு இளைஞர்களும் மதத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும். மதத்தில் நம்பிக்கை கொண்ட மனிதனுல் தான் வாழ்க்கையில் முன்னேற முடியும். உலகிலேயே சிறந்ததான நமது சைவ மதத்தில் உள்ள ஒரு சிலரின் சில தீய நடவடிக்கைகளினுல் அதன் புனிதத் தன்மைக்குக் குந்தகமேற்பட்டுவருகின்றது. நல்ல முறையில் நமது மதத்தின் பெருமைகளை வளர்க்கவும் பாதுகாக்கவும் இளைஞர்கள் முன்வரவேண்டும்'

இவ்வாறு இணுவில் இந்து விளையாட்டுக்கழக வருடாந்த கலைமகள்விழா கொண்டாட்டத்தை ஆரம்பித்து வைத்துப்பேசிய மேற்படி கழகத் தலைவர் திரு. எஸ். இலங்கைநாதன் கூறினார்.

### உடுவிலில்

உடுவில் இளைஞர் வர்த்...

## யாழ். தலைவர் கோஷ்டிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். தலைவர் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், வட்டுக்கோட்டை பட்டதாரிகள் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். தலைவர் தெரிவுக் கோஷ்டி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியின் ஆரம்பத்தில் இரு கோஷ்டிகளும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காத வண்ணம் விளையாடினுர்கள். ஆஞலும், யாழ். தலைவர் கோஷ்டி இடைவேளைக்கு முன்பாகவே இரு கோல்களைப் போட்டுவிட்டது

இடைவேளையின் பின் யாழ் தலைவர் கோஷ்டியின் விளையாட்டில் வேகம் அதிகரித்ததுக் காணப்பட்டது. இவர்களின் முன்னணி வீரர்கள் மின்னல் வேகத்தில் அடுத்தடுத்து மூன்று கோல்களை மேலும் கூடுதலாகப் போட்டனர் பட்டதாரிகள் கோஷ்டி இடைவேளைக்குப் பின் ஒரு கோலையும், ஆட்டம் முடிவடையும் வேளை 'பெஞல்டி' மூலம் இரண்டாவது கோலையும் போட்டனர்.

யாழ். கோஷ்டியின் ...

## இன்றைய பலன்

புரட்டாதிமாதம்25-ம்திகதி

(11-10-70)

மேஷம்: குடும்பத்தில் குறைகேட்க நேரிடும் சிலருக்கு விரக்திமனப்பான்மை தென்படும், பொறுமையுடன் நடப்பது நன்று.

ரிஷிபம்: நீண்டநாள்பிரச்னைக்கு இன்று நல்ல முடிவு ஏற்படும். முன்னேற்றமான தினம்,

மிதுனம்: இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். நாடகக் கலைஞர்களுக்கும் நற்புகழ் உண்டு. பொன்னன தினம்

கடகம்: வயிற்றுக் கோளாறு தோன்றக்கூடும். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். அமைதி நன்று

சிம்மம்: இனிமையின் அமைப்பு இன்று உங்களுக்கு கிடைக்கும், களஸ்திர வழியாலும் கண்ணியம் சேரும்.

கன்னி: தொழில் துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கு இடமுண்டு கடிதம் வேதனையைத் தரலாம், மனத்திடம் வேண்டும்.

துலாம்: அன்புக் கரங்கள் அணைக்கும். அதிஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம். இன்று சுகபோகநாள்

விருச்சிகம் தொழில் துறையில் நன்மாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். சுபதினம்

தனுசு: புதிய வழிகள் மூலம் பொருள் வரவுக்கு இடமுண்டு. சிலருக்குப் பதவிஉயர்வும் கிடைக்கலாம் கவர்ச்சிகரமான தினம்.

மகரம்: தானிய விருத்தியில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம். விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள், அமைதி விரும்பத்தக்கது.

கும்பம்: பிள்ளைகளின் தொல்லைகள் கவலையைத் தரலாம் பிறருடன் பகைத்துக்கொள்ளவும் நேரிடும்

மீனம்: அதிகாரப் பேறுக்கும் பொருள் வரவுக்கும் இடமுண்டு. குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும்.

சோதிடக் கலாநிதி

**திருமலை க. வேலுப்பிள்ளை**

## கருத்தரங்கு

சுழிபுரம், சனி

''தமிழ் பேசும் மக்கள் சிங்கள மொழி கற்கவேண்டுமா?'' என்னும் பொருள் ...

# "அன்பு வழியில் சிறப்புகள் யாவும் கிடைக்கும்"

தாவடி, சனி

'நாட்டில் நிலவும் அசுர சக்தியைப் போக்கவேண்டுமாஞல் நம்மிடைப் தெய்வீக சக்தி தோன்றவேண்டும். இதற்கு இறையன்பு பெருகவேண்டும். தெய்வீக சக்திக்காகப் பாடுபட்டு வரும் இளைஞர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்படவேண்டும். நாங்கள் நன்மைபெறவேணடுமாஞல், அன்புவழியே சிறந்தது. இவ்வழியிஞல் சிறப்புகள் யாவும் கிடைக்கும். அன்பிஞல் தெய்வீக சக்தியைப் பெறமுடியும்.'

இவ்வாறு திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி விநாயகராலய முன்றலில் நடத்தப்பட்டுவரும், சைவமுன்னேற்றக் கழகத்தின் 2-வது ஆண்டு இசைவிழாவின் 8-ம் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துரையாற்றிய, இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் கூறிஞர்.

மணிவாசக அரங்கிலே நடந்த இவ்வைபவத்தில் திரு. தனபாலசிங்கம்மேலும் பேசுகையில் கூறியதாவது -

தெய்வீக சக்தியும் அசுர சக்தியும் எந்நேரமும் எம்முள்ளே நின்று போரிடுகின்றன இதன் உட்கருத்தின் காரணத்தைத் தான் பாரதப்போர் சூரன்போர், இரா-இராவணப்போர் என்பன எடுத்துக்காட்டுகின்றன. அசுரசக்தி பயத்தையும், தெய்வீகசக்தி அன்பையும் கொடுப்பன.

நவராத்திரியின் உட்கருத்தை அறிந்து தமிழ்மக்கள் கொண்டாடி வருவார்களேயாஞல் சகல நலன்களும் பெற்று முன்னேற்றமடைய முடியும்.'

நியாயவாதி திரு. கே. வி எஸ். சண்முகநாதன், சங்கீத வித்வான் திரு. போல் திலகநாயகம் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகள் இடம் பெற்றன.

......

## இடமாற்றம்

வேலணை, சனி

வாழைச்சேனை மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய வேலணையைச்சேர்ந்த திரு. தி. நடராசா இம்மாதம் தொடக்கம் நெடுங்கேணி மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## பாடசாலையைத் தரம் உயர்த்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயப் பெற்ருர் ஆசிரிய சங்க வருடாந்தக் கூட்டம் தலைமையாசிரியர் திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

''சின்னத்தம்பி வித்தியாயலத்தை ஒரு மகாவித்தியாலமாக்கித் தரும்படி வித்தியாதிபதியைக் கோருவதென்றும் இவ்வித்தியாலயம் பழையதாக இருப்பதால் புதியகட்டிடம் அமைத்துத் தரும்படிகேட்டுக்கொள்வதென்றும்கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது, புதுவருட உத்தியோகத்தராக பின் வருவோர்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. க. மாணிக்கம், செயலாளர்: திரு. க. கோபாலரத்தினம் தனதிகாரி: திரு. சி. பரமானந்தம் பதினைந்து பேர் கொண்ட நிர்வாகசபையும் நிறுவப்பட்டது.


கைத்தறி நெசவாளர்களுக்கு

**ஓர் அறிவித்தல்**

உங்களிடம் உற்பத்தியாகும் எந்தவிதமான கைத்தறி ஜவுளிகளையும் பெறுமதியான விலைகளுக்கு எம்மிடம் விற்பனை செய்யலாம்,

**S. R. S. ஜவுளி மாளிகை**

எஸ். ஆர். செல்லத்துரை, 216, கே.கே.எஸ். ரோட், யாழ்ப்பாணம். போன்: 296

உங்கள் வீட்டிற்கு 'ஈழநாடு' நேரடி விநியோகம்

நாரந்தனை, வேலணை கிராமசபை எல்லைகளுக்குள் ...


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வேலைத்தலப் பரிபாலகர்

மயிற் தாபனம்

யா. மா. ச. மத்தியசந்தை,
பெரிய கடை, யாழ்ப்பாணம்

2506

Daily 4-45, 7&9-45 p.m.
Poya days 4 Shows
HOW TO SAVE
A MARRIAGE
AND RUIN YOUR LIFE
(Panavision&color)

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

எம். ஜி. ஆர், சரோஜாதேவி
நம்பியார் — தங்கவேலு
நடித்த

# திருடாதே

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

கண்ணன் - ராதிகா
தேங்காய் சீனிவாசன்
நடித்த


# ஒரு விரல் (ஒரு மர்ம சித்திரம்)

கெப்பிட்டல்
(கொழும்பு)

வெலிங்டன் யாழ் நகர்

(2-30, 6-30, 9-30)

தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்

# துலாபாரம்

(தமிழ்)

★ ஏ. வி. எம். ராஜன்

இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா

காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி

டைரக்ஷன்: வின்ஸன்ட்

(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

தலைத்தான் பூசையென்று இன்று நம்மவர்கள் நம்புகிறார்கள், இறைவிக்குத் தேவையானவை அமுதம் அல்ல அன்புதான் தேவை. கலைத் தெய்வ பூசை என்பது அன்பைக் காணிக்கையாக்குவதேயாகும். கல்வியறிவை ஒவ்வொரு மனிதனுக்கும் நாம் ஊட்டுவதன் மூலம் தேவியின் கருணையை பெறமுடியும்.

கல்லூரி அதிபர் திரு. வி ஜி. சம்பந்தன் ஆசிரியர் ... கலைமகள்விழா கொண்டாட்டத்தை ஆரம்பித்து வைத்துப்பேசிய மேற்படி கழகத் தலைவர் திரு. எஸ். இலகுநாதன் கூறினார்.

## உடுவிலில்

உடுவில் இளைஞர் வர்த்தக கலைமன்ற மாணவர்கள் நவராத்திரிவிழா கொண்டாடினர். இசை, நடனம், பேச்சுமுதலியன விழாவில் இடம்பெற்றன.

# உடைபற்றிக் கண்டனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
'மூகலாய மன்னன், சிவாஜி மன்னன் காலம் தொடக்கம் நவராத்திரி சரஸ்வதி பூஜை தமிழ் மக்களால் சாதி சமயம் மொழி என்ற பாகுபாடின்றிக் கொண்டாடப்பட்டுவருகின்றது. யாழ். அரசாங்கச் செயலகத்திலும் இவ்விழா நடப்பது மகிழ்ச்சியாகும்' என செல்வி புஷ்பா செல்வநாயகம் யாழ். அரசாங்க அதிபர் திரு. நிமல் அமரசேகரா தலைமையில் யாழ். அரசாங்கச் செயலகத்தில் நடைபெற்ற சரஸ்வதி விழாவில் பேசுகையில் கூறினார்.

இப்பொழுதெல்லாம் பெண்கள் அணியும் ஒருவகை உடையைக்கண்டித்துப்பேசிய அவர் கணுக்கால் தெரியாதவாறு உடை அணிவதே தமிழ்ப்பெண்கள் மரபு என்றார். பண்டிதர் என். எஸ். முருகேசுவும்பேசினார்.

வேம்படி, மகளிர்கல்லூரி இந்துமகளிர்கல்லூரி, இராமநாதன் கல்லூரி மாணவிகள் பக்திப்பாடல் பாடினார்கள் சரஸ்வதி அந்தாதிப்பாடலும் ஓதப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் திரு ரி. முருகேசம்பிள்ளை நன்றி தெரிவித்துப் பேசினார் (கு வி ம)

# 'பெண்கள் பொறுமையிழந்தால் உலகம் பொறுக்காது'

யாழ்ப்பாணம், ஞாயிறு
''எப்படியான இக்கட்டான கட்டங்களிலும்பெண்கள் மிகப் பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும் பெண்கள் பொறுமையை இழந்தால் உலகம் பொறுக்காது. அசுரன் ஆணவத்தால் கொண்ட அறியாமையைப் போக்க துர்க்காதேவி பிறந்தாள்'' என வடகோவை இலுப்பையடி விநாயகர் ஆலய நவராத்தி விழாவில் கலந்து கொண்ட முத்தமிழ் மணி செல்வி. நாகேஸ்வரி அருளம்பலம் கூறினார்.

இளஞ்சைவப் புலவர் திரு. கு. வி. மகாலிங்கம் பேசியபோது கூறியதாவது: அறியாமையைப் போக்க கல்வி வேண்டும். கற்றபின் அவ்வாறு நடக்கவேண்டும். சரஸ்வதிக்கு விழா எடுப்பது வித்தியா விருத்திக்காகும் தேவியின் கிருபை கிடைக்க நாம் அவளை உபாசித்து வழிபடல்வேண்டும்,''

தி சிவதெட்சணாமூர்த்தி பொ. இரகுநாதன் முதலியோர் உட்படப்பலர் பேசினார்கள். (கு. வி ம)

... போட்டனர் பட்டதாரிகள் கோஷ்டி. இடைவேளைக்குப் பின் ஒரு கோலையும், ஆட்டம் முடிவடையும் போது 'பெனல்டி' மூலம் இரண்டாவது கோலையும் போட்டனர்.

யாழ் கோஷ்டியின் முன்னணி வீரர்களான மணி, போல், இராசையா ஆகியோர் முறையே 2, 2, 1 கோல்களைப் போட்டனர். பட்டதாரிகள் கோஷ்டியில் வீரர்கள் தேவகாந்தன், றேமன்ட், புரட்சிதாசன் ஆகியோரின் விளையாட்டு சிறப்பாக இருந்தது. ஆட்ட முடிவில் யாழ். கோஷ்டி 5—2 கோல்களால் வெற்றி பெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம் தலைவர் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் கொழும்பு சென். பெனடிற் கல்லூரியின உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில், ஒரு சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி இன்று மாலை 4-30 க்கு யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது. (தே. நி)

......

## புதியஅதிபர்

பூநகரி, சனி
பூநகரி மாகாவித்தியாலயத்திற்கு அதிபராக திரு. எஸ். சிவகுரு இம் மாதம் 3-ம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். பூநகரிப்பகுதி பெற்றோர் அநேகரின் வேண்டுகோளின் படி பூநகரியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் இங்கு மாற்றப்பட்டுள்ளார்

## கருத்தரங்கு

சுழிபுரம், சனி
''தமிழ் பேசும் மக்கள் சிங்கள மொழி கற்கவேண்டுமா?'' என்னும் பொருள் பற்றிய ஒரு கருதரங்கு இம் மாதம் 13-ம் திகதி பண்டிதர் ப. இராசகுரு தலைமையில் வழக்கம்பரையில் நடைபெறவிருக்கின்றது வட்டுக்கோட்டை முன்னாள் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதம பேச்சாளராகக் கலந்துகொள்ளும் இக்கருத்தரங்கில் வேறு பலரும் உரையாற்றுவர்.

.....

## கயரோக அறிவுப்போட்டி

சுழிபுரம், சனி
இலங்கை கயரோக நிவாரண தேசிய சங்க வலிகாமம் மேற்குக்கிளை கயரோக அறிவுப் பிரசாரப் போட்டிகளை இம்மாதம் 14-ம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடத்தவுள்ளது. எழுத்துப் பரீட்சை காலையில் பண்ணாகம், பண்டத்தரிப்பு, மானிப்பாய், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து சகல போட்டிகளும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

நிறுவப்பட்டது.

## உங்கள் வீட்டிற்கு 'ஈழநாடு' நேரடி விநியோகம்

நாரந்தனை, வேலணை கிராமசபை எல்லைகளுக்குட்பட்டவர்களுக்கு வீடுகள்தோறும் 'ஈழநாடு' பத்திரிகையை விநியோகம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. 'ஈழநாடு' பிரதிகள் தேவையானவர்கள் பின்வரும் விலாசதாரர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வை. வடிவேலு,
ஈழநாடு 'ஏஜண்ட்'
புளியங்கூடல் சந்தி.

பி. வில்லியம்,
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.

வி. யேசுராசா,
சரவணை மேற்கு,
வேலணை.

2499

## மரண அறிவித்தல்

K. K. அம்புறோஸ்

K. K. அம்புறோஸ் (F. S I) இளைப்பாறிய அரசாங்க நிலஅளவையாளர். திருமதி அலிஸ்சின் அன்புக்கணவரும் Dr. ராஜமன்னன் (அமெரிக்கா) வோல்டர் (கிராமசபை, பரந்தன்), பூவதி, றெஜி, குமார் (அமெரிக்கா) மனிங், கமலா, நிர்மலா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஜொன்சி, அரியமலர், செபஸ்டியாம்பிள்ளை (G. P. O), மாகிரட், அலெக்சாண்டர் (C. G. R) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலமாகிவிட்டார். இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சென். மேரீஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படுவார். மரணச் சடங்குகள் யாழ்ப்பாணம் No. 16, கொன்வென்ற் இல்லத்தில் நடைபெறும்.

2507

# யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் — காஞ்சனா
மஞ்சுளா - நாகேஷ் - ரமாபிரபா
நடித்த

# சாந்தி நிலையம்

# தீபாவளி விற்பனை!

உங்களுக்கும் உங்கள் குழந்தைச் செல்வங்களுக்கும் உகந்த

- ★ கைத்தறி டெக்கா
- ★ சிலோன் மணிப்புரி
- ★ பிளேன் வோயில்
- ★ ஜொயின்ட் நைலக்ஸ்
- ★ பிறின்ரட் நைலக்ஸ்
- ★ பிளேன் நைலக்ஸ்
- ★ பிறின்ரட் வோயில்
- ★ றெடிமேட் புளவ்ஸ்

சேட்டிங் — சூட்டிங் — சன்சூட்ஸ்

மற்றும்

சகலவிதமான ஜவுளி வகைகளும் கண்கவர் வண்ணக் கலர்களில் எமது கைவசமுண்டு.

உங்களின் தீபாவளித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள எம்மிடம் விஜயம் செய்யுங்கள்.

# சீப்சைட்

(வடஇலங்கையின் புகழ்பெற்ற புடவை மாளிகை)

186-188, கே. கே. எஸ். றேட் — யாழ்ப்பாணம்.
(போன்: 479)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பதை முற்ருகநிறுத்தவற்புறுத்து

## ஐ. நா. பொதுச் சபை விசேஷகுழு தீர்மானம்

வாஷிங்டன், அக், 10

**தென்னுபிரிக்காவுக்கு ஆயுதங்கள் எதுவும் விற்பனை செய்வதை முற்ருக ஒரு முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்று உறுப்பு நாடுகளைக்கோரும் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளுடன் ஐ. நா. பொதுச் சபையின் விசேஷ குழுவில் நேற்று நிறைவேறியது,**

32 ஆஸிய ஆபிரிக்க நாடுகள் இந்தத் தீர்மானத்தை தாககல் செய்திருந்தன.

ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமை ஸ்தாபனத்தைச் சேர்ந்த விசேஷக் குழுவொன்று மேற்கு நாடுகளுக்கு விஜயம்செய்த தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பனை செய்வதை நிறுத்தும்படி வற்புறுத்தவிருக்கும் அதே வேளையில் இந்தத் தீர்மானமும் ஐ. நா. பொதுச் சபை விசேஷக் கமிட்டியில் நிறைவேற்றப் பட்டிருக்கின்றது.

தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பகற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்திருப்பது ஆபிரிக்க ஆஸிய நாடுகளில் பெரிதும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இதுவிஷயமாக பிரிட்டிஷ் அரசுடன் பேசுவதற்கு சாம்பியா அதிபர் கென்னத் கவுண்டா விரைவில் லண்டனுக்குவரவிருப்பதாகத்தெரிகின்றது.

பிரிட்டனுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்நோக்கத்துடன் அடுத்த வருடம் சாம்பியாவில் காமன்வெல்த் ஆட்சி மன்ற பிரதிநிதிகள் மகாநாட்டை நடத்துவதற்கும் அந்தநாடு மறுப்புத் தெரிவித்திருக்கின்றது. தென்னுபிரிக்காவுக்கு எல்லாவித ஆயுதங்களும் விற்பனைசெய்வதைத் தடைசெய்யவேண்டும் என்று நேற்று ஆஸிய ஆபிரிக்க நாடுகள் பொது சபையின் விசேஷக் கமிட்டியில் தாக்கல்செய்த தீர்மானத்தில் கேட்டுக்கொண்டன. தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பதற்கு எதிராக கடந்த ஜூலை மாதம் பாதுகாப்பு சபை நிறைவேற்றிய தீர்மானம் கண்டிப்பாக செயல்படுத்தப்படவேண்டும் என்றும் கமிட்டி வற்புறுத்தியது.

ஐ. நா. பொதுச் சபையில் விசேஷக் கமிட்டியில் தாக்கல் செய்யப்பட்டமேற்படி தீர்மானத்தை 94 நாடுகள் ஆதரித்தன. இரண்டு நாடுகள் எதிர்த்துவாக்களித்தன. ஏழு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

அங்கத்துவ நாடுகள் இது விஷயமாக எவ்வாறு நடந்துகொள்கின்றன வென்பதை ஆராய்ந்து டிசம்பர் 10-ம் திகதி வாக்கில் பொதுசபைக்கு அறிவிக்கும்படியும் பொதுச்செயலாளர் யுதாண்டை குழு வற்புறுத்தியுள்ளது.

## பஸ் விபத்து: 42 பேர் பலி

புதுடில்லி, அக். 10

மத்தியப் பிரதேசத்திலுள்ளசம்பாமாகாணத்தில் நடந்த பஸ் விபத்தில் 42 பேர் மரணமடைந்தனர். 13 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 6பேர் ஆபத்தான நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர், இவ்விபத்துக்குள்ளான பஸ் இமாலய அரசாங்க போக்குவரத்துச் சபையைச் சேர்ந்ததாகும்.

## லண்டன் மாநாட்டில் இலங்கையர்

லண்டன். அக். 10

எடின்பரோ கோமகன் பரிசுத் திட்டம் எவ்வகையில் செயல்படுகிறது என்பதனை விளக்குமுகமாக லண்டனில் மாநாடு ஒன்று நடைபெற்றது. இலங்கை உட்பட 31 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கு பற்றினர். இலங்கைப் பிரதிநிதியாக திரு. ஜே. ஜே ஜி அமிர்தநாயகம் இந்த மாநாட்டில்

# அம்மான் நகரில்

சூயஸ்பகுதி போர் நிறுத்த மீறல்

# உறுதியான ஆதாரம் கைவசம் இருக்கிறதாம்

## ரேஜர்ஸ் கூறுகிறர்

நியூயோர்க், அக். 10

சூயஸ்கால்வாய் பகுதியில் போர் ஒய்வு மீறல்கள் நடந்திருப்பதற்கான உறுதியான ஆதாரங்கள் அமெரிக்காவிடம் இருப்பதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. வில்லியம் ரேஜாஸ் இன்று தெரிவித்தார்.

சூயஸ்கால்வாய் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் ஏவுகணைத்தளங்களை ரஷ்ய நிபுணர்களே இயக்குகிருர்கள் என்றும், போர் ஒய்வு மீறப்பட்டிருப்பதாகவும் இஸ்ரேல் முன்பு குற்றஞ்சாட்டியிருந்தது. இக்குற்றச்சாட்டுகளை ரஷ்யவெளிவிவகார அமைச்சு மறுத்திருந்தது.

இவ்வித மீறல்கள் சூயஸ் கால்வாய் பகுதியில் நடந்திருப்பதாகவும், அதற்குரிய ஆதாரங்களை ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் திரு. குரோமிக்கோவை நியூயோர்க்கில் சந்திக்கும் பொழுது நேரடியாயாகக் காண்பிக்கப் போவதாகவும் திரு. ரேஜர்ஸ் சொன்னுர்.

வியட்நாம் அமைதித்திர்வுக்கு அமெரிக்க ஜனதிபதி நிக்ஸன் தெரிவித்தயோசனைகளை வடவியட்நாம் அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ளும்படி ரஷ்யர்கள் வற்புறுத்துவார்கள் என்றுதாம் நம்புவதாக அவர்தெரிவித்தார்.

அமெரிக்கா ஜனதிபதி நிக்ஸனின் வியட்நாம் அமைதிக்கெனதெரிவித்தயோசனைகளை வடவியட்நாமும் ரஷ்யாவும் கண்டித்தமை குறிப்பிடத்தக்கது'

# வீட்டில் கும்பம்வைத்தவரை வீடுபுகுந்து தாக்கினுர்களாம்!

முல்லைத்தீவு, சனி

வீட்டில் கும்பம்வைத்துப் பூசைசெய்து கொண்டிருந்தவர், பேயை ஏவிவிட மந்திரம் சொல்கிருரென்ற சந்தேகத்தின் மீது சிலர் அவரின் வீட்டுக்குள்புகுந்துதாக்கினராம். தாக்கப்பட்டவர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார், தாக்கியவர்களௌனக்கருதப்படுபவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வட்டுவாகல் வாசியான பேதுருப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை என்பவர் இன்று வீட்டில் கும்பம்வைத்துப்

## தளபதி ஒய்வு பெறுவார்

கொழும்பு, சனி

இலங்கைவிமானப்படைத் தளபதி வைஸ்மார்வுல் ருேகன் அமரசேகரா இவ்வாண்டு முடிவுடன் தமது பதவியினின்றும் ஒய்வு பெறுகிருர். அவர் ஒய்வு பெறுவதற்கு இன்னும் காலமிருந்தபோதிலும் எதிர்வரும் டிசம்பர் 31-ம் திகதியுடன் திரு. அமரசேகரா சேவையினின்றும் விலகிக் கொள்கிருர். காப்டன் பி. எச். மெண்டிஸ் புதிய தள

ரஷ்யருக்கு நோபல் பரிசு

## இஸ்வெஸ்தியா கண்டனம்

மாஸ்கோ, அக். 10

ரஷ்ய எழுத்தாளரான அலெக்சாந்தர்சொலிசெனிக்கிற்கு இவ்வருடத்திற்குரிய இலக்கியத்துக்கான நோபல் பரிசு அளித்ததை ரஷ்யப் பத்திரிகையான இஸ்வெஸ்தியா கண்டித்துள்ளது.

ரஷ்ய எழுத்தாளர் சங்கத்திலிருந்துசென்ற ஆண்டு நீக்கப்பட்ட ஒருவருக்கு நோபல் பரிசு கொடுத்ததை ரஷ்ய எழுத்தாளர் சங்கம் கண்டித்துள்ளது.

திரு சொல்செனிக் புற்றுநோய் முதல் வட்டம் ஆகிய இருநாவல்களையும் எழுதியுள்ளார். இவரது நாவல்களில் ஸ்ரலினிசத்திற்கு எதிரான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

## இத்தாலியில் விவாகரத்து அனுமதி

ரோம், அக். 10

இத்தாலியில் விவாகரத்தை அனுமதிக்கும் சட்டம் இன்று சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டது. இந்நாட்டில் உள்ள மக்கள் விவாகரத்து செய்வது குற்றம் எனப் பல்லாண்டு காலமாக இருந்துவந்த சட்டம் மாற்றப்படுகின்றது.

## சுதந்திரம் பெறும் பிஜித் தீவுகள்

லண்டன், அக். 10

பிஜித் தீவுகள் இன்று பூரண சுதந்திரம் பெறுகின்றன. இன்று மாலை பிரிட்டிஸ் கொடி இறக்கப்பட்டு பிஜித்தீவின் சுதந்திரக் கொடி பறக்கவிடப்பட்டது.

இங்கு நடைபெறும் சுதந்திர விழாவில் மகாராணி எலிசபெத் சார்பில் அவரது மகன் இளவரசர் சாள்ஸ் கலந்து கொண்டார்.

சுதந்திரமடையும் பிஜித் தீவின் முதல் பிரதமராக சேர். கமிஸி மாரா பதவி ஏற்பார். பிஜித்தீவுகள் சுதந்திரமடைந்தாலும் அது தொடர்ந்து சாம்ராஜ்ய கூட்டணியில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நூற்ருண்டு காலமாக இத்தீவுகள் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இருந்து வந்தன. பிஜித்தீவுகளுக்குச் சுதந்திரம் வழங்குவதென ஏப்ரல் மே மாதங்களில் லண்டனில் நடந்த பேச்சு வார்த்தைகளின் பொழுது முடிவு செய்யப்பட்டது.

பிஜித்தீவுகள் பூரண சுதந்திரம் அடைந்தபின்பும் அந்நாட்டுக்குப் பொருளாதார தொழில் நுட்ப உதவிகளை பிரிட்டன் வழங்கிவருமென அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பிஜி 844 தீவுகளைக் கொண்டது. இதன் மொத்த நிலப்பரப்பு 7,055 சதுர மைல்களாகும். நியுஸிலாந்திற்கும் அவுஸ்திரேலியாவிற்கும் மத்தியிலுள்ள இத்தீவுக் கூட்டம் இயற்கை வனப்பும் நிலவளமும் உடையது. 1969-ம் ஆண்டு நடைபெற்ற மதிப்பீட்டின் படி பிஜித் தீவுகளின் ஜனத்தொகை 519,000 ஆகும். இதில் 215,000 பேர் பிஜி வம்சாவழியினர் 256,000 பேர் இந்திய வம்சாவழியினர் மிகுதிப்பேர் ஐரோப்பிய சீன இனங்களைச்சேர்ந்தவர்கள்.

சுதந்திரமடையும் பிஜித் தீவுகள் ஐ. நா. சபையில் அங்கத்துவம் பெறவிருக்கிறது. இந்த நாடு ஐ. நா. சபையில் 127-வது உறுப்பு நாடாக இருக்கும்.

## அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கு புதியவர்கள்

யாழ்ப்பாணம், சனி

பூநகரி கிராஞ்சியல்முன்பு தென்னைப் பயிர் செய்கைக்கு வழங்கப்பட்டகாணிகளை அபிவிருத்தி செய்யாத காரணத்தால் திரும்பப் புதியவிண்ணப்பங்கள் கோரியாழ். அரசாங்க செயலகத்தில் காணிக் கச்சேரி நடைபெற்றது.

வடபிரதேச மாவட்டக் காணி அதிகாரி திரு. பொன்னம்பலம் மேற்படி காணிக் கச்சேரியை நடாத்தினுர். விண்ணப்பதாரர்களின் பொருளாதாரத்தகுதி முதலிய விபரங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

(குவிம,

## 'விவசாயிகளிடம் வரி அறவிடப்படாது'

யாழ்ப்பாணம், ஞாயிறு

"நெல், உப-உணவு, காய்கறி பழவகை அதிகம் நாட்டில்உற்பத்திசெய்து மக்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் விவசாயிக்கு நிலவரி. நீர்வரி அறவிடப்படாது''

இவ்வாறு கூறும் மஜைரை குஞ்சுப்பரந்தன், பரந்தன், கலவெட்டித்திடல் பயிர்ச்செய்கைக்குழுக்கள் பொறுப்பான அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளன.

மேலும் அவ்வறிக்கையில் கூறியிருப்பதாவது:- இவ்வாண்டு வெரும்போக வேளாண்மைக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விதை கிட்டிய இடங்களில் விற்கவும் ஒழுங்கு செய்துதரவேண்டும்,

விவசாய போதனுசிரியர்கள் உரப்பசளை மருந்து முதலியன வற்றை கமங்களுக்குப் பாவிக்க தகுந்த காலத்தில் பயிற்சியளிக்க வேண்டும். குவிம:

## பல வகுப்பினர் அமைச்சரவை

லா-பாஸ், அக். 10

பொலிவிய நாட்டின் ஜனதிபதியாகப்பிரகடனப்படுத்திய ஜெனரல் ரொறெஸ் நாட்டை ஆளுவதற்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மான் நகரில் கொமாண்டோ தலைவர்

அம்மான், அக்.10

பாலஸ்தீன விடுதலை முன்னணித் தலைவர் திரு.யாஸர் அரபாத் இன்று யோர்டானியத் தலைநகரான அம்மா'னுக்கு விஜயம்செய்துள்ளார். ஜோர்டானிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி புதிய ஒரு உடன்பாட்டைச் செய்துகொள்வதற்காகவே இவர் அம்மான் நகருக்கு விஜயம் செய்துள்ளார் என விசயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜோர்டானிய நகரில் பாலஸ்தீனக்கொமாண்டோக்களுக்கும் ஜோர்டானிய அரசுப் படைகளுக்குமிடையில் நடந்த கடும் சண்டைக்குப்பின் அம்மானுக்கு திரு. அரபாத் விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

அரபாத் ஜோர்டானிய அதிகாரிகளுடன் செய்து கொள்ளவிருக்கும் புதிய உடன்பாட்டில், ஜோர்டானில் அரபுக்கொமாண்டோக்கள் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு அனுமதி அளிக்கும் விடயமும் உள்ளடங்கி இருக்குமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

## நெல்வர்க்கப் பரிசோதனை

அம்பன், சனி

வடமராட்சிப்பகுதி விவசாய விரிவாக்கப்பகுதியினரால் நல்லின நெல்வர்க்கப் பரிசோதனை நடாத்தப்பெற்று வருகின்றது. உவர் நிலத்திலும், கடும்வரட்சியிலும் விளையக்கூடிய நெல்லினங்களை இம்முறைவரவழைத்துள்ளனர். இவ்வகையான நெல்லினங்கள் இப்பகுதிச் சுவாத்திய நிலைக்கு உகந்ததாவென்பதை பரிசோதனை செய்கின்றனர். இப்பரிசோதனையில் ஐ. ஆர்-8, ஏச்-4, பீ.ஜீ-11-11, டிக்வீ, பினுலொட் ஆகிய ஐந்து இன நெல் வர்க்கத்தை தெரிந்து இரசாயன உரமிட்டு நவீன முறையில் செய்து வருகின்றனர்.

வடமராட்சி கிழக்குப்பகுதியில் நெல்விளைச்சல் ஆகக் குறைந்துள்ளது இத்தகைய பரிசோதனை வெற்றியளித்தால் இப்பகுதியில் விதைக்கப்படாமலிருக்கும் பல ஏக்கர் கணக்கான தரிசு நிலங்களில் நவீன முறையில் விவசாய உற்பத்தி செய்யப்படாலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பரிசோதனை வடமராட்சிப்பகுதி விவசாய போதனாசிரியர் திரு.ப. பாலராசா தலைமையில் நடைபெற்று வருகின்றது.

## நெசவு ஆசிரியர்களை நியமிக்குக

அம்பன் சனி

முள்ளியான் நெசவு நிலையத்திற்கும் வத்தராயன் நெசவு நிலையத்திற்கும் ஆசிரியர்கள் இல்லாமல்நெசவுத்தொழில் பயிலும் மாணவர்கள் அவதியுறுகின்றனர்.

இரு நெசவு சாலைகளுக்கும் பொதுவில் கடமையாற்றிய நெசவு ஆசிரியர் திரு ஜே. இராசரத்தினம் மண்டைதீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது எனவே இவ்விரு நெசவுசாலைகளுக்கும் ஆசிரியர்களை நியமிக்கும்படி கிழைக்கரை அபிவிருத்தி முன்னணி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர் அனுப்பியுள்ளது.

## கொடித்தினம்

அம்பன், சனி

யாழ் மாவட்ட சமூக சேவாசபைக் கொடித்தினம் கடந்த 28-ந் திகதி தொடங்கியுள்ளது. கொடித்தின நிதியை பாடசாலை ஆசிரியர்களும் கிராமசேவையாளர்களும் திரட்டி வருகின்றனர்.

## இலவசபால்மா

அம்பன், சனி

குடத்தனைக் கிராமசபை எல்லைக்குட்படவுள்ள ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இரண்டாவது தடவையாக இலவச பால்மா விநியோகம் அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கிறது. ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒருஇருத்தல்வீதம் ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் இரு தடவைகள் பால்மா வழங்கப்படும். அம்பன் அரசினர் வைத்திய சாலைப் பொறுப்பதிகாரியின் சிபார்சிலேயே இது வழங்கப்படும்

பெற்றது, இலங்கை உட்பட 31 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கு பற்றினர். இலங்கைப் பிரதிநிதியாக திரு. ஜே. ஜே ஜி அமிர்தநாயகம் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்

இந்தப் பரிசுத் திட்டத்தில் இவ்வாண்டு உலகம் முழுவதிலுமிருந்து 100,000 இளைஞர்கள் பங்குபற்றுகிறார்கள். சமூக சேவை, வீரதீரச் செயல்கள் கல்வித்துறை போன்ற பல்வேறு முயற்சிகளில் அரிய சாதனைகளை ஈட்டும் இளைஞர்களுக்கு எடின்பரோ கோமகன் பரிசுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் சுமார் 750,000 இளைஞர்கள் பங்குபற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இத் திட்டத்தின் தலைமைக் காரியாலயம் லண்டனில் உள்ளதாயினும் சாம்ராஜ்ய நாடுகள் உட்பட மொத்தம் 35 நாடுகளில் இத்திட்டம்செயல்படுகிறது

## இயற்கைச்சூழல்பற்றிய சாம்ராஜ்ய மகாநாடு

லண்டன், அக். 10

இயற்கைச் சூழலுக்குக்குந்தகம் ஏற்படாதவாறு கைத்தொழில் அபிவிருத்தியை ஊக்குவிப்பது சம்பந்தமாக இம்மாதம் 19-ம் திகதி மால்டாவில் சாம்ராஜ்ய மகாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது. சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலர் இந்த மகாநாட்டில் பங்குபற்றுவார்கள்.

இயந்திரமயம்காரணமாக இயற்கைச் சூழல் அசுத்தமடைவதைத் தடுப்பது, இயற்கை வளங்களை பாதுகாப்பது, போன்ற பல விவசாரங்கள் இம்மாநாட்டின் போது ஆராயப்படும். ஆறு தினங்கள் வரை நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டில் கேம்பிரிஜ். எடின்பரோ டூர்ஹம் சர்வகலாசாலைகளைச் சேர்ந்த உயிரியல் விஞ்ஞானிகள் பலர் உரைநிகழ்த்துவார்கள். இயற்கைச் சூழலைப் பாதுகாப்பது சம்பந்தமாக நடைபெறும் முதலாவது சாம்ராஜ்ய மகாநாடு இதுவென்பது குறிப்பிடத் தக்கது.

## ரஷ்யாவில் புதிய ஸ்தானிகர்

கொழும்பு, சனி

ரஷ்யாவில் இலங்கை ஹைகமிஷனராக திரு. ஸி. டி. ஸி. சிறிவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார் திரு. ஜஸ்டின் கொத்தலாவலை முன்னர் இலங்கை ஸ்தானிகராக அங்கு இருந்தார்.

ஆஜர்செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வட்டுவாகல் வாசியான பேதுருப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை என்பவர் தனது வீட்டில் கும்பம்வைத்துப் பூசை செய்ததாகவும் அவ்வூரைச் சேர்ந்த சிற்றம்பலம் அல்லது சின்னராமர் என்பவரும் அவருடைய மக்களான ஆழ்வாப்பிள்ளை, இராசையா, சோமசுந்தரமும் வேறுசிலரும் மேற்படி நபரின் வீட்டில் புகுந்து அவரைத் தாக்கியதுமல்லாமல் தங்கள் வீட்டுக்குக்கொண்டு சென்று கட்டிவைத்துத்தாக்கியதாகவும். அயலவர் ஒருவர் இதுபற்றி உடனடியாக முல்லைத்தீவுப் பொலிசுக்கு அறிவித்ததாகவும் பொலிசார் ஸ்தலத்துக்கு உடன் விரைந்து சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ததாகவும் அறியப்படுகிறது.

பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட சிற்றம்பலம் இராசையா, ஆழ்வாப்பிள்ளை சோமசுந்தரம் ஆகியோர் நேற்று முல்லைத்தீவுமேலதிக நீதிபதி ஜனாப் ஏ. ஐ. எம். சகீட் முன் ஆஜர்செய்யப்பட்டனர். சந்தேகநபர்களை தலா ரூபா 200 பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி இம்மாதம் 15-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

தாக்குதலுக்காளான அந்தோனிப்பிள்ளை முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கொழும்பில் மாகாண வித்தியாதிபதிகள்

கொழும்பு, சனி

பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் விரைவில் நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது. பட்டதாரிகளுக்கு ஆசிரிய பதவி வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சை நாட்டின் எல்லாமாகாணங்களிலுமுள்ள கல்விக் காரியாலயங்களில் நடைபெற்றது தெரிந்ததே.

இதுசம்பந்தமாகமாகாண வித்தியாதிபதிகள் கொழும்பு வந்துள்ளதாயும் தெரிவு செய்யப்பட்டபட்டதாரிகளின் நியமனக்கடிதங்களை இவர்கள் பெற்றுத் திரும்புவரென்றும் தெரிகிறது தெரிவு செய்யப்படும் பட்டதாரிகளுக்கு எந்த இடத்தில் எந்தப்பாடசாலையில் இடம் அளிப்பதென்பது மாகாண வித்தியாதிபதியின் பொறுப்பிலேயே விடப்படுமென்றும் தெரிய வருகிறது.

பெறுவதற்கு இன்னும் காலமிருந்தபோதிலும் எதிர்வரும் டிசம்பர் 31-ம் திகதியுடன் திரு. அமரசேகரா சேவையினின்றும் விலகிக்கொள்கிறார். காப்டன் பி. எச். மெண்டிஸ் புதிய தலைபதியாகநியமனம்பெறுவார்

## தந்திக்கம்பி திருட்டு

கொழும்பு. சனி

கடந்த ஒன்றரை மாதங்களில் வடபகுதியில் 922 ரூத்தல் தந்திக்கம்பிகள் களவுபோயுள்ளதாக தபால் தந்திப்பகுதி தெரிவிக்கிறது 20-8-70க்கும் 6-10-70க்குமிடையில் நடைபெற்ற இக்களவில் திருடப்பட்ட கம்பிகளின் பெறுமதி ரூபா 3688 ஆகும்.

கோண்டாவில், இணுவில், அரியாலை, அராலி, மண்கும்பான், தச்சன்தோப்பு, விளான், வட்டுக்கோட்டை, அளவெட்டி முதலான இடங்களில் தந்திக்கம்பிகள் களவாடப்பட்டுள்ளன.

## புதிய நிர்வாகிகள்

வெள்ளவத்தை, சனி

உள்நாட்டு இறைவரித் திணைக்கள இந்துமன்றத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு வ சுப்பிரமணியம், துணைத்தலைவர்கள் திருவாளர்கள்: சு சி கணேஸ்வரன், சி கந்தசாமி அ தனபாலசிங்கம், செயலாளர்: திரு தம்பு சிவசுப்பிரமணியம், துணைச்செயலாளர்: திரு பொ பாலசிங்கம், பொருளாளர்: திரு தி ஸ்ரீஸ்கந்தராசா, துணைப் பொருளாளர் திரு த தங்கவேல்.

8பேர் கொண்ட செயற்குழு வொன்றும்தெரிவுசெய்யப்பட்டது.

## சைகோனில் பௌத்தமகாநாடு

சைகோன், அக்.10

உலக பௌத்த சமய மகாநாடு சைகோனில் கூடுகிறது. இம்மகாநாட்டில் இலங்கை உட்பட 16 நாடுகளைச் சேர்ந்த 78 பிக்குகள் கலந்துகொள்வர்.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

...யில் நிறைவேற்றப்பட்டது. இந்நாட்டில் உள்ள மக்கள் விவாகரத்து செய்வது குற்றம் எனப் பல்லாண்டு காலமாக இருந்துவந்த சட்டம் மாற்றப்படுகின்றது. கத்தோலிக்க மதநம்பிக்கைக்கு விவாகரத்து விரோதமானது என்று அவர்கள் கருதியதே இதற்குக் காரணமாகும்.

இத்தாலியில் விவாகரத்தை அனுமதிக்கும் சட்டம் 14 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

இம்மசோதாவிற்கு ஆதரவாக 164 வாக்குகளும் எதிராக 150 வாக்குகளும் கிடைத்தது.

ப்பான அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளன.

மேலும் அவ்வறிக்கையில் கூறியிருப்பதாவது:- இவ்வாண்டு வெரும்போக வேளாண்மைக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விதை நெல், பசளை, காய்கறி பழவகைவிதை, சிறுதானிய விதை முதலியவற்றை இம் மாத முடிவுககு முன்பு விநியோகம் செய்ய வேண்டும்.

உழவு இயந்திர நிலய மூலம்இயந்திரங்களைபெற்று கமக்காரர்கள் வேண்டிய காலத்தில் வயல்களை உழுது அவ்விடமே கூலியை வசூல் செய்யவேண்டும்

கிருமி நாசினி மற்றும் விவசாய சம்பந்தமான மருந்துகளைக் கமங்களுக்குக்

## அமைச்சரவை

லா-பாஸ், அக். 10

பொலிவிய நாட்டின் ஜனாதிபதியாகப்பிரகடனப்படுத்திய ஜெனரல் ரொறெஸ் நாட்டை ஆளுவதற்குரிய புதிய மந்திரிசபையை அமைத்துள்ளார்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவையில் சரி பாதிப்பேர் இராணுவத் தலைவர்களாவர். மிகுதிப்பேர் தொழிலாளர் யூனியன் விவசாய பல்கலைக்கழகத் தலைவர்களாவர்.

இடதுசாரி இயக்கத்தைச் சேர்ந்த திரு. ரொறெஸின் மந்திரிசபையையிட்டு மக்கள் திருப்தியடைந்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

தற்பொழுது அச்சில்

★ ஈழநாடு தினக்குறிப்பு 1971
★ Eelanadu Pocket Diary 1971
★ கலண்டர் 1971

1971-ம் ஆண்டுக்குரிய 'ஈழநாடு' தினக்குறிப்பில் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

★ புதிய அரசாங்கம் பற்றிய தகவல்கள்.
★ சரித்திர சம்பந்தமான விடயங்கள்.
★ புவியியல், பொது அறிவு, விஞ்ஞானம் ஆகியவற்றிற்குரிய குறிப்புகள்.
★ போயா, அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறைகள் ஆகியன தினக்குறிப்பில் விசேடமாக இடம்பெற்றுள்ளன.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்

விபரங்களுக்கு: தினக்குறிப்பு 1971
'ஈழநாடு'
தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தலையிலுள்ள அறிவு கீழ்நோக்கி, அதாவது உள்ளத்தை நோக்கி இறங்காவிடில் சிக்கலான சமயங்களில் அந்த அறிவினால் எப் பயனும் ஏற்படாது.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

சௌம்ய வருஷம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 25-ந் திகதி (11 - 10 - 70)


## "இரண்டாவது சபை"

இலங்கையின் புதிய அரசியல் அமைப்பில் 'இரண்டாவது சபை' எனப்படும் செனேட்சபை தொடர்ந்து இருக்கவேண்டுமா? என்பது பற்றி கருத்துவேற்றுமைகள் நிலவுகின்றன. இன்றுள்ள செனேட்சபையில் அரசாங்கக் கட்சிக்கு போதிய பெரும்பான்மைப் பலம் இல்லை. காரணம் மொத்தம் 30 பேரடங்கிய அச் சபையில் பாதி ஸ்தானங்கள் பழைய பிரதமரின் சிபார்சின் மீது கவர்னர்ஜெனரல் நியமித்ததாகும். முன்னாள் பிரதமர் தமது கட்சிக்காரரையோ அல்லது ஆதரவாளரையோ தான் சிபார்சுசெய்திருப்பார். அவர்கள் நீடித்து செனட்டர்களாக இருந்து வருவதால்தான், புதிய அரசாங்கம் கொண்டுவேந்த அரசியல் திருத்த மசோதா தோற்றது. இத் தோல்வியை காரணமாகக் கொண்டு அந்த சபையையே ஒழித்து விடுவதாயின் அரசியல் திட்டத்திலே ஒரு முக்கியமான பாதுகாப்பு இல்லாமற் போவதாகும்.

நியமனக் கொள்கைக்குப் பதிலாக புதியமுறையில் தேர்தல் கொள்கையைக் கைக்கொண்டு இரண்டாவது சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யலாம். இப்போது பிரதேசவாரியாக ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். செனேட் எனும் இரண்டாவது சபையில் 15 பேர்களை ஜனப்பிரதிநிதி சபையினர் தேர்தல் மூலமும் மற்ற 15 பேர்களை கவர்னர் ஜெனரல் நியமன மூலமும் நிரப்புகின்றனர் இந்தப் பழைய முறைக்குப் பதிலாக நாட்டிலே பல பல தொழில்கள் செய்பவர்கள். தங்கள் பிரதிநிதிகளை இரண்டாவது சபைக்குத் தெரிவுசெய்வதாயின் அது பலவிதங்களிலும் நன்மையாகும் உதா

கள், பத்திரிகைக்காரர்கள், வர்த்தகர்கள், கைத்தொழில் அதிபர்கள், தொழிலாளர் முதலிய பல்வேறு தொழில்களில் ஈடுபட்டவர்களையும் அவரவர்களது தொழிற்சங்கமூலம் தெரிவுசெய்து இரண்டாவது சபைக்கு அனுப்பினால், அது அதிகபிரதிநிதித்துவம்வாய்ந்ததாகவும், அனுபவ அறிவாளிகள் நிறைந்ததாகவும் இருக்கும். ஆகவே புதிய சட்டதிட்டங்கள் செய்யும் போது அதனால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்களை நன்குணர்ந்து தக்கயோசனைகளை அச் சபையினர் கூறக்கூடியதாகவும், தவறுகள் ஏற்படாமல் தவிர்க்கக்கூடியதாகவும் செய்யலாம். பல தொழில்களும் வளருவதற்கான வாய்ப்புக் கிடைப்பதுடன் தொழிற்சங்கங்கள் ஒற்றுமைப்பட்டு, நல்லமுறையில் வளர்ச்சியடையவும் இதனால் வழிபிறக்கலாம்.

இரண்டாவது சபையே வேண்டாமென்றும், ஒரே பார்லிமெண்ட் சபை போதுமென்றும் தீர்மானிப்பதாயின் பல தொழிற்சங்கங்களும் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யக் கூடியதாகச் செய்து, பார்லிமெண்ட் சபையையே விஸ்தரிக்கலாம். பல பல தொழிற்சங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிப்பதால், தொழிலறிவுள்ளவர்கள் பலரது யோசனைகளும் பார்லிமெண்டுக்குக் கிடைக்கும். பார்லிமெண்ட் சபை மெம்பர்களின் எண்ணிக்கையை இருநூறுக்கு உயர்த்துவதன் மூலம், இதுவரை பிரதிநிதித்துவம் இல்லாத பல அம்சத்தவர்களுக்கும் அச் சபையில் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி செய்யமுடியும் யார் யாருக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற விவரங்களை, அரசியல் நிர்ணயசபை தீர்மானிக்கலாம். அதற்கிடையே ஒரு

# இந்தியாவில் 'பேராசைக்கொடும்பாவி' தகனம்

### ஐயாறன் எழுதுவது

"பேராசை மனிதன்" என்ற 12 அடி உயரமுள்ள 'கொடும்பாவி'யை ஹைதராபாத்தில் சமூக, சர்வோதய ஊழியர்கள் கொளுத்தியுள்ளார்கள். "தானலோப சமிதி" என்ற பெயரில் ஒரு ஸ்தாபனத்தை அவர்கள் அமைத்து நாட்டிலே பேராசையை ஒழிக்க புதியதோர் இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்தச் சமிதியின் தலைவர் முன்னாள் அமைச்சரான சங்கரராவ் தேவ் அவர்கள். பண ஆசையை ஒழிக்கப் பொதுமக்கள் திரண்டு எழச்செய்வதே இந்த இயக்கத்தின் நோக்கமென்றும், செகந்தராபாத்தில் மற்றோர் "கொடும்பாவி" சீக்கிரத்தில் கொளுத்தப்படுமென்றும் இந்த இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவிக்கிறார்.

"காம தகனம்" போல் பேராசைக் கொடும்பாவியையும் கொளுத்தும் இயக்கத்தைக் கிராமங்களிலும் ஆரம்பிக்கப் போவதாகத் தெரிகிறது முதல் "பேராசைக் கொடும்பாவி"யை மகாத்மா காந்தி ஜயந்தியன்று (அக்டோபர் 2) ஹைதராபாத் சுல்தான் பஜாரில் கொளுத்தினர்.

0 0 0

ஆசை தான் மனிதனின் இன்னல்களுக்கெல்லாம் காரணம். இந்த ஆசையிலிருந்து மனிதன் விடுபட்டால் மனித குலமே மகிழ்ச்சியுடன் வாழக்கூடும். இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பாகப் புத்தர்பெருமான் இதைப் போதித்தார். பல புனித நூல்களும், மகான்களும் இதை அறிவுறுத்தியுள்ளனர். ஆனால் ஆசைகள் குறைவதற்குப் பதில் வளர்ந்தே வருகின்றன. இந்த ஆசையைக் கொல்ல வழி என்ன?

சோஷலிஸ நாடுகளில் பூமியெல்லாம் தேச உடமை ஆக்கப்பட்டுள்ளன. அங்கு மண்ணாசையைச் சட்ட மூலம் கொன்றிருக்கிறார்கள். ஒரு சிலரின் கையில் பொருள் அதிகம் சேர்ந்துவிடாமல் தடுக்கும்படியான சட்ட திட்டங்களும் அங்கு செய்யப்பட்டுள்ளன. நில உச்சவரம்புச் சட்டம் முதலியவற்றை இந்தியாவிலும் செய்துள்ளனர். நிலமில்லாதவருக்கு நிலம் கொடுக்க வேண்டுமென்று பூமிதான இயக்கமும் நடைபெறுகின்றது. மனிதன் ஆசையின்றி சுயநலம் அற்றவனாகவும், பிறருக்காக வாழ்பவனாகவும் இருப்பின். அவனிடம் எவ்வளவு நிலம் இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் ஆசையற்ற மனிதர் எவ்வளவு பேர் இருக்கமுடியும்?

பேராசை பிடித்து, அதிக நிலமும், பணமும், பொருள்களும், நகைகளும் வைத்திருப்பவர்கள் இக்காலத்தில் நிம்மதியாக வாழ முடியவில்லை. 'நக்ஸல்பாரி' முதலிய இயக்கத்தினர் திடீர் திடீரெனத் தோன்றிப் பொருட்களைக் கொள்ளை அடிப்பதுடன் ஆளையே கொலைசெய்துவிடுகிறார்கள். இந்தியா எங்கும் படித்த வாலிபர்களும் இந்தப் பயங்கர இயக்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள். இதனால் பணக்காரர் நிம்மதியாக வாழமுடியவில்லை. அவர்களது பணமே அவர்களுக்கு எமனாக உள்ளது. மடியில் கனம் இருந்தால் தானே வழியில் பயம்?

படித்த வாலிபர்கள் வேலையின்றி உண்ண உணவுக்கும் வகையின்றி பட்டினி கிடந்து தவிக்கையில் ஒருசில பேராசைக்காரர்கள் பிறரைச் சுரண்டி, உல்லாச, சுயநல வாழ்க்கையை நடத்துவதாயின் அதை மக்கள் எப்படிச் சகிப்பர்? பொலிஸோ இராணுவமோ அவர்களை எப்படிக் காப்பாற்ற முடியும்? பேராசையை விட்டு, பொது நலனுக்காக அவர்கள் வாழ முற்படுவதுதான் அவர்களுக்கு உண்மையான பாதுகாப்பு அதை அறிவுறுத்துவதே இந்தப் புதிய இயக்கத்தின் நோக்கமாகும், இதேசமயம் நிலங்களைத் தேச உடமையாக்கும் சோஷலிஸச் சட்ட திட்டங்களும் அடுத்தபடியாக வருவதற்கு இந்த இயக்கம் ஓர் ஆரம்பமாக இருக்கலாம்.

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று அமரகவி பாரதியார் முழங்கினார் இந்தியாவிலே எவ்வளவோ பேர் உணவின்றிப் பட்டினி கிடக்கின்றார்கள். (இலங்கையில் எல்லாருக்கும் ஒரு கிழமைக்கு ஒரு கொத்து இலவச அரிசி கிடைக்கிறது. அதனால் இங்கு யாரும் பட்டினி கிடக்கத் தேவையில்லை) பக்கத்திலே பலர் பட்டினி கிடக்கையில் ஒருசிலர் மட்டும் உண்டு களித்திடுவது எவ்வளவு காலம் நீடித்திருக்கமுடியும்?

0 0 0

முற்காலத்திலே விவசாயத்தின் நோக்கம். மக்களின் பசியை ஆற்றுவதுதான். அந்த நோக்கத்தையும் பண்பையும் இப்போது வெகுவாக மறந்துவிட்டோம். பண லாபம். அதிக லாபம் இதுவே இன்றைய விவசாயத்தின் முக்கிய நோக்கம். விவசாயம் மட்டுமல்ல, வைத்தியம் முதலிய எல்லாத் தொழில்களும், மனிதருக்கான சேவைகளாக இன்றி, சுய லாப நோக்கத்தையே அடிப்படையாகக்கொண்டிருக்கிறது. சமூக சேவையெல்லாம் பெயரளவில்தான் இந்த அவல நிலையை மாற்றி. மனித அன்பின் அடிப்படையிலே ஒரு புரட்சியை நோக்கியே உலகம் இன்று சென்றுகொண்டிருப்பதைப் பார்க்கிறோம், அந்தப் புரட்சியை அமைதியான முறையில் ஏற்படுத்தி, மனிதனின் மனதை அன்பு வழியில் மாற்றுவதுதான் பேராசைக் கொடும்பாவியைத் தகனம்செய்யும் இயக்கத்தின் நல்ல நோக்கம். இந்த இயக்கம் நமது இலங்கையிலும் ஆரம்பித்து அது வெற்றிபெற்றால், பலாத்கார இயக்கங்கள் தலைதூக்காமல் தடுக்கப்படலாம்.

0 0 0

காஞ்சீபுரத்திலே இந்திய நிதிமந்திரி வை. பி சவான் பேசுகையில், "ஏழ்மையும், பொருளாதார அநீதியும், ஏற்றத்தாழ்வுகளும் பம்பாய் முதலிய நகரங்களில் உள்ள சேரிகளில் அதிகம் பார்க்கின்றோம் இவை நீடிக்கும்வரை எப்படிக் காங்கிரஸ்காரர் சும்மா இருக்கமுடியும்? எல்லாம் நன்றாக இருக்கிறதென்று எப்படிச் சொல்லலாம்" என்று கேட்டு ஏழ்மையை ஒழிப்பதே இன்றைய முக்கிய வேலையென்று சரியாகச் சொன்னார்.

காங்கிரஸில் ஏற்பட்ட பிளவுக்குக் காரணம், தனிப்பட்டவர்கள் அல்லவென்றும், சோஷலிஸ இலட்சியக் கொள்கையைத் துரிதமாகச் செயற்படுத்தத்தானென்றும் அமைச்சர் சவான் கூறினார். மக்களுக்கும் காங்கிரஸுக்கும் உறவில்லாமற் போனதுடன், பல வருட காலமாகத் தங்களது நம்பிக்கையான தலைவராக இருந்த திரு. காமராஜர் சோஷலிஸத்துக்கு மாறானவர் பக்கம் சேர்ந்துவிட்டாரென்றும் குறிப்பிட்டார்.

ஏழ்மையையும், பட்டினியையும் புதிய காங்கிரஸ் எப்படி ஒழிக்கப்போகின்றது? வெறும் பேச்சுகளால் இது தீராது உடனடியாகப் பசி பட்டினியைத் தீர்க்கக் காரியத்தில் இறங்கினால் தான் பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படமுடியும்.

0 0 0

சிறையாரும் மடக்கிளியே
இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன்
மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடற்றோணி
புரத்தீசன் துலங்குமிளம்
பிறையாளன் திருநாமம்
எனக்கொருகால் பேசாயே

— சம்பந்தர்.

# 181 ரூபாய் கோரினார் கிடைத்தது 90 சதம்

முல்லைத்தீவு, சனி

ரூபாய் நூற்றி எண்பத்தொன்று பிரயாணச்செலவு கோரி விண்ணப்பம் செய்த ஆசிரியர் ஒருவருக்கு சதம் தொண்ணூறு மாத்திரம் கல்வி இலாகாவால் வழங்கப்பட்டதாம்.

முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த ஆண்டான்குளப் பாடசாலையிலிருந்து கொக்கிளாய் பாடசாலைக்கு இடமாற்றலாகிய ஆசிரியர் திரு ப. சிவஞானம் என்பவர் தனக்கு ஆண்டான் குளத்திலிருந்து கொக்கிளாய்க்கு சாமான்களைக் கொண்டு சென்ற பிரயாணச் செலவாக 181 ரூபா தரும்படி வவுச்சரை வடமாநில கல்வி அதிபதிக்கு அனுப்பிவைத்தாராம், அவருக்கு 90 சதத்துக்குமட்டும் வவுச்சர் வந்ததாம்

இதுபற்றிப் பிரஸ்தாப ஆசிரியர் கூறியது: பஸ் கட்டணமாவது கிடைக்கவில்லை இதுபற்றி கல்விமா அதிபருக்கும், வடமாநிலவித்தியாதிபதிக்கும் அறிவித்தும் இதுவரை பதில் கிடைக்கவில்லை.

# '15 ஆயிரம் வாக்காளருக்கு ஒரு தொகுதி ஆக்குக'

ஊரதீவு, சனி

"நமது நாட்டுக்கு 'இலங்கை' என்ற பெயரே தொடர்ந்தும் வழங்கப்படவேண்டும். இந்த நாட்டின் அதிகாரத்தைப் பிரதமரே கொண்டவராயிருத்தல் வேண்டும், பிரதமரும் ஜனாதிபதியும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மூலமே தெரிவு செய்யப்படவேண்டும். பதினையாயிரம் வாக்காளருக்கு ஒரு பிரதிநிதி என்ற முறையில் தேர்தற் தொகுதிகள் அமைக்கப்படவேண்டும். இன்றைய அரசியல் அமைப்பிலே சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பாக இருக்கின்ற இருபத்தொன்பதாவது ஷரத்து அரசப்பேரவை மேன்முறையீட்டுரிமை ஆகியன புதிய அமைப்பிலேயும் இருக்க வேண்டும், தமிழும், சிங்களமும் அரசகருமமொழிகளாகப் பிரகடனப்படுத்தப்படவேண்டும். பல்கலைக் கழகப் பிரவேசங்களுக்கோ அல்லது அரசாங்க உத்தியோகங்களுக்கோ இனவிகிதப்படியான தேர்வு நடைபெறுது. திறமைக்கே முதலிடம் கொடுக்கப்படவேண்டும். பல்வேறுவகைப்பட்ட மதத்தினர் வாழும் இந் நாடு மத சார்பற்ற நாடாகப் பிரகடனப்படுத்தப்படவேண்டும்"

மேற்கண்டவாறு ஊரதீவு இளந்தமிழர் மன்றப் பொதுச்சபை அமைச்சர் திரு கொல்வின் ஆர் டி. சில்வாவைக் கோருவதென ஏகமனதாகத் தீர்மானித்தது.

# பொலீஸ் வேடம் தரித்து யுவதியைக் கடத்தினராம்

## எழுதுமட்டுவாளில் சம்பவம்

எழுதுமட்டுவாள், சனி

பொலிஸ் உடையில் வந்த இருவர் யுவதியைக்கடத்திச்சென்றனர் முதல்நாள் நடைபெற்ற கடத்தல் முயற்சி படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்து அடுத்த நாள் பொலிஸ் வேடத்தில் வந்த இவ்விருவரும் சுலபமாகவே பெண்ணைக்கடத்திச் சென்றனர். முதல் நாள் கடத்தல் முயற்சியில் ஈடுபட்ட நபர்களைத்தாம்பிடித்துவிட்டதாகவும் விசாரணைக்குப் பொலிஸ் நிலையம் வரவேண்டுமென்றும் கூறிஇப்பெண்ணை அவர்கள் கடத்திச்சென்றனராம்.

லுக்குப் போன சமயம் சந்தேகநபர்கள் இருவரும்பொலிஸ் உடையில் சென்று முதல்நாள் நடைபெற்ற கடத்தல் முயற்சியில் சம்பந்தபட்டவர்களைப் பிடித்துவிட்டதாகவும் எனவே விசாரணைக்கு யுவதியை பொலிஸ் நிலையம்வரவேண்டுமென்று கேட்டதாகவும் கூறப்பட்டது.

அவர்களுடன்செல்லயுவதி மறுக்கவே பொலிஸாருடன் போக என்ன பயம்' எனக் கூறியுவதியை அவர்களுடன் அனுப்பிவைத்தாராம் அங்கிருந்தவ யோதிபப் பெண்

நேற்றைய தொடர்ச்சி

# இலங்கையும் சமஷ்டி அமைப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலே பல பல தொழில்கள் செய்பவர்கள். தங்கள் பிரதிநிதிகளை இரண்டாவது சபைக்குத் தெரிவுசெய்வதாயின் அது பலவிதங்களிலும் நன்மையாகும் உதாரணமாக நாட்டிலுள்ள டாக்டர்கள் (ஆங்கிலம்), வைத்தியர்கள் (ஆயுர்வேதம்), மருத்துவர் (சித்தம்) ஆசிரியர்கள் (சிங்களம், தமிழ்) ஆசிரியைகள், வழக்கறிஞர்கள், இன்ஜினியர் கிடைக்கும்படி செய்யமுடியும் யார் யாருக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற விவரங்களை, அரசியல் நிர்ணயசபை தீர்மானிக்கலாம். அதற்கிடையே ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற சட்டத்தையும் செய்வதாயின், தொழிற்சங்க போட்டிகள் மறையவும், தொழில்அமைதி ஏற்படவும் கூட வழிபிறக்கலாம்.

## சுழிபுரம் பஸ் பிரயாணிகள் சங்கம் முறையீடு

சுழிபுரம், சனி

சுழிபுரம் பகுதியிலிருந்து பஸ் பிரயாணம் செய்யும் மக்கள் படும் அவதிக்கு உதாரணமாக நேற்று முன்தினம் நடந்த இரண்டு சம்பவங்களை மேலதிகாரிகளின் கவனத்துக்கு சுழிபுரம் கிராமசபை பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

'சுழிபுரத்திலிருந்து அதிகாலை ஏழு மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள காரியாலயத்தில் கடமையாற்றச் செல்ல நின்ற முப்பதுக்கு மேற்பட்டோர் பத்தரை மணிக்குத் தான் அன்று யாழ்ப்பாணம் போக முடிந்தது. அதுவரை ஒரு இ. போ. ச. வண்டியும் அப்பாதையால் செல்லவில்லை. அடுத்த தினம் சுழிபுரம் காளுவன் சந்தியிலிருந்து சுமார் ஐம்பது பிரயாணிகள் காலை 7-15 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கி சென்ற இ. போ. ச. பஸ் வண்டியில் ஏறினர். வண்டி புறப்பட்டு முன்னூறுயார் தூரத்தில் பழுதாகி நின்றுவிட்டது. சுமார் எண்பதுக்கு மேற்பட்ட பிரயாணிகள் அதில் இருந்தனர். பின்னர் இரண்டு பஸ் வண்டிகள் அவ்வழியே வந்தன. ஆனால் பழுதடைந்த பஸ் வண்டியில் இருந்த ஒரு பிரயணியையும் அவை ஏற்றவில்லை. சற்றுத் தொலைவிலுள்ள பஸ் நிலையத்தில் நின்ற சுமார் பதினைந்து பேரை ஏற்றிக் கொண்டு அந்தபஸ் சென்றது. பழுதடைந்த பஸ் வண்டியில் பிரயாணஞ் செய்தவர்களுக்கு இடமளிக்காததும் அவர்களை அவமதித்ததும் ஏன் என்பது புரியவில்லை. இப்படியான சம்பவங்களை விசாரணை செய்து சுழிபுரம் மக்களின் கஷ்டத்தைப் போக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என பிரயாணிகள் சங்கம் இ. போ. ச. மேலதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு

**பொதுக்கலைத் தகுதித் தேர்வு: பொது விஞ்ஞானத் தகுதித் தேர்வு**

மேற்குறித்த வகுப்புக்களில் இம்மாத இறுதியில் மாணவர் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இவற்றிற்கான விண்ணப்பபத்திரங்களையும் இவை பற்றிய விபரங்களடங்கிய கைந்நூலையும் மேல்விலாசமெழுதி முத்திரை ஒட்டிய நீளமான தபாலுறை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்,

விண்ணப்பங்கள் 19-10-70 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்.
வட்டுக்கோட்டை.

2505

## மரண அறிவித்தல்

**திருமதி ப. சிவக்கொழுந்து**

முன்னைநாள் கலேவலை தனலக்குமி ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், தற்பொழுது மாங்குளம் தனலக்குமி ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய திரு. சி. பரராசசிங்கம் அவர்களின் பிரிய பத்தினி சிவக்கொழுந்து அவர்கள் காலமாகிவிட்டார்கள். அன்னாரின் பூதவுடல் 11-10-70 மாலை 4 மணியளவில் புங்குடுதீவு புங்கங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். 2329

## பல்கலைக்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளது.

இக்கோரிக்கை புறக்கணிக்கப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர் தனிப்பட்ட முறையில் உயர் நீதிமன்றமூலம் நடவடிக்கை மேற்கொள்ள விருப்பதாகத் தெரியவருகிறது.

(படு நி.)

நேற்றைய தொடர்ச்சி

# இலங்கையும் சமஷ்டி அமைப்பும்

— எஸ், சிவசுப்பிரமணியம் —

0 அரசியல் திட்டம் வகுப்பதில் அதில் என்னென்ன அம்சங்கள் இடம்பெற வேண்டுமென்பது பற்றிய கட்சிகளின் கருத்துக்கள் அரசியல் நிர்ணயசபையில் விவாதிப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அரசியல் நிர்ணயசபையின் தலைவர் கட்சிகளதும் தனிப்பட்டவர்களதும் பல்வேறுபட்ட கருத்துக்களையும் வரவேற்கிறார். பிரதம மந்திரி அரசியல் திட்ட அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா திரு பீற்றர்கெனமன் ஆகியோரும் மற்ற அமைச்சர்களில் ஒருவரும் அரசியல் நிர்ணயசபையின் முடிவுகள் அங்கத்தவர்களின் பரஸ்பர கருத்துப் பரிமாறல்களிலிருந்தே எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்,

அரசாங்கக் கட்சித் தலைவர்களாகிய இவர்களின் இந்த நோக்கம் காலஞ்சென்ற பிரதமர் திரு பண்டாரநாயக்கா அரசியல் திட்டத்தில் சீர்திருத்தம் செய்வது குறித்து ஆராய இணைப்பு ஆட்சிமன்றக் குழுவொன்றை நியமிக்க சிபார்சு செய்தமையைப் பின்பற்றியமைந்ததாகவுள்ளது எனலாம்.

0 சமஷ்டிக் கொள்கையைப் பொறுத்தளவில் அது சில சூழ்நிலையில் நன்மை பயக்கக் கூடியதும் சிறந்ததுமாகும். அரசியல் நிர்ணய சபையில் விடயங்களை விவாதிப்பதற்குநல்ல சூழ்நிலையை ஏற்படுத்தக் கொடுத்தால் சமஷ்டியை ஆதரித்து உண்மையான உறுதியான விடயங்களை கடந்தகால அல்லது தற்போதைய உறுதிமொழிகள் பாகுபாடுகள் ஆகியவற்றைத் தவிர்த்து விவாதிக்கலாம்.

0 பரஸ்பரம் ஒருவருக்கொருவர் குற்றம் சுமத்துதலை தவிர்க்க வேண்டும், கடந்த காலத்தில் எல்லோரும் தவறுகள் விட்டிருக்கிறார்கள். இப்பொழுதும் தவறுகள் விடுகிறார்கள். தொடர்ந்தும் தவறுகள் செய்வார்கள்.

0 சமஷ்டிக் கொள்கையை சிங்களவர் முஸ்லிம்கள் (மலாயர் உட்பட) மலையகத் தமிழர் பறங்கியர் ஆகியோர் விரும்பவில்லை. இலங்கைத் தமிழ்ச் சமூகத்தினரில் ஒரு பகுதியினரும் சமஷ்டிக் கொள்கையை அங்கிகரிக்கவில்லை.

■ பெரும்பான்மையான மக்கள் சமஷ்டிக் கொள்கையை நன்கு விளங்கிக் கொள்ளவில்லை. இந்த உண்மையை எதிர் நோக்குதல் வேண்டும்.

0 சமஷ்டி என்பது நாட்டைப் பிரிப்பதல்ல என்று திரும்பத் திரும்ப உறுதியாகக் கூறுவதன் மூலம் இப்போதைய நிலைமையைச் சமாளிக்கவியலாது.

0 இலங்கையின் கடந்தகால வரலாறு சமஷ்டி நாட்டின் பிரிவினைக்கு வழிவகுக்கும். நாட்டை இரு சுதந்திரமான பிரிவுகளாகப் பிரிக்கும்.

இரு பிரிவினது சுதந்திரம் ஒற்றுமையாகியவற்றிற்கு பெருந்தீமையை விளைவிக்கும்என்ற மக்களின்பீதியை வலுப்படுத்தும்.

0 இத்தகைய ஒரு பிரிவுக்கான சூழ்நிலைகளை உருவாக்குவது தற்போதைய சர்வதேசநிலைமையில் அது அன்னியராட்சி திரும்பவும் இலங்கையில் நிலவ வழிவகுக்கும். எந்த அமைப்பிலும் சமஷ்டிமுறை அரசாங்கத்தை நிறுவுதல் இத்தகைய நிலையேஉருவாக்கும்.

0 உலகம் முழுவதும்நிலவும் நிலைமையை நோக்குமிடத்தும் குறிப்பாக இலங்கைக்கு அண்மையில் உள்ள நாடுகளின் நிலைமையை நோக்குமிடத்தும் மேற்படி சூழ்நிலைகளை உருவாக்குதல் நன்மைபயப்பதாக வமையாது. அத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டால் விரைவில் அல்லது என்றுவது ஒருநாள் நாடு மிக மோசமான பிரிவினையையடைய ஏதுவாகும்,

0 இன்றை சமஷ்டி தமிழ் தலைவர்களும் ஆட்சி மன்ற அங்கத்தவர்களும் எவ்வளவுக்கு உண்மையானவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் இருந்தாலும்அவர்களதுஉறுதிப்பாட்டால் ஒருவித ஆதாரமுமில்லை, ஏனெனில் தமிழ் மக்கள் பிரிவினையை விரும்ப மாட்டார்கள். இவர்கள் இந்த உறுதிப்பாடுகள் வருங்கால சந்ததியினரை எந்த விதத்திலும் உடனடியாகவோ அல்லது பிற்காலத்திலோ ஒன்றுபடுத்தமாட்டா.

0 இந்தியாவின் பிரிவுகள் போன்று இலங்கையின் வரலாற்றில் இடம் பெறுதிருப்பது நல்லது. இந்தியாவின் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட அரசுகளதும் அவற்றின் அரசியல் நிலைமையையும் இட்டு அவைபற்றிதிரும்பவும் ஆலோசனை செய்யப்படுவது இங்கு குறிப்பிடத்தக்க தொன்றாகும். இது குறித்து இந்திய ராஷ்டிரபதி வி. வி. கிரி சமீபத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.

நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும்மொழிவாரிப்பிரிவுகள் பங்கம் விளைவிக்குமானால் அவைபற்றித் திரும்ப ஆராயவேண்டிய காலம்வரும் எனத் திரு. வி வி கிரி இங்கு இன்று கூறினார்.

நாங்கள் வேறுவழியில் தீர்வுகாணவேண்டியேற்படும்' என அவர் அகில கேரள பாலாஜன சகல சிறுவர்கள் சங்கம் திரு வி வி கிரிக்கு அளித்தவரவேற்பில் கூறினார்.

சிறிய பொது பிரச்னைகள் சிறிய பிணக்குகள் பூசல்கள் உண்மையாயிருந்தாலும்சரி கற்பனையானாலும்சரி எங்களது சமநிலைமையைக் குலைத்துவிடும். ஒரு பிரிவு ஒரு சாரார் ஆகியோர்களது நலனுக்கு தேசிய நலன் குறித்து முதன்மையளிக்கப்படும் எனமேலும் ராஷ்டிரபதி கூறினார்.

0 பொதுவாக இலங்கையின் நலனைப் பொறுத்தும் குறிப்பாகத் தமிழ் மக்களது நலனைக்குறித்தும். அரசியல் நிர்ணயசபை தமிழர்களது நலனையும் ஒற்றுமையையும் பாதுகாப்பதற்கு வேறு வழிவகைகளைக் கையாளவேண்டும். தமிழர்களது நியாயமான தேவைகளைப் பாதுகாப்பது தற்போது அதிகாரத்திலிருக்கும் சிங்கள முஸ்லிம் சமூகங்களது கடமையாகும்.

0 மற்றநாடுகள் குறிப்பாக இரு மொழிகளை அல்லது பல்வேறுமொழிகளையுடைய அல்லது பல இனமக்களைக்கொண்ட நாடுகள் உதாரணமாகும் உதாரணமாக சுவிற்சர்லாந்துனடா சோவியத் யூனியன் ஆகிய நாடுகளில் நடந்தவை எங்களுக்கு நல்ல உதாரணமாகும். ஆனால் கட்டுப்பாடுடையதாகவிருக்க வேண்டும் ஒருநாட்டின் அரசியலின் தனித்துவம் வாய்ந்த உள்நாட்டு வெளிநாட்டு விசேஷ சூழ்நிலைகளும் கடந்தகால வரலாறும்அரசியல் திட்டம் வகுக்கப்படுவதில் முக்கிய இடம்வகிப்பவை.

0 வகுக்கப்படும் புதியஅரசியல் அமைப்புத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொழுது தற்போதைய நிர்ணயசபையின் சரத்துக்களை புதிய அரசியல் திட்டத்தைச் செயல்படுத்துவதின் மூலம் ஏற்படும் அனுபவவாயிலாக ஆராய்வதற்கு எதிர்காலத்தில் புதியதொரு அரசியல் நிர்ணயசபைநிறுவுவலற்கான வழிவகைகளையும்அரசியல் திட்ட வகுப்பாளர்கள் செய்ய வேண்டும்.

0 இலங்கைக்கு சமஷ்டி அரசியல் அமைப்பு பொருத்தமானதாகவிருந்தாலும், அதைக் கோரும் நேரமும் அதை அடையும் நேரமும் வாய்ப்பாக அமையவில்லை. ஏனெனில் எவ்வித நேரத்திலும் தமிழர்களுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டிய சமூகங்களும், மற்றும் இனமக்களும் சமஷ்டியை எதிர்க்கிறார்கள் இத்தகைய சூழலில் சமஷ்டி அமைப்புவேண்டுமெனத்தொடர்ந்து கோரியவண்ணம் இருப்பதால் சுயமாக ஒரு சமஷ்டி அரசு கிடைத்துவிடப்போவதில்லை அல்லது நல்லெண்ணத்தையும் ஒருமைப்பாட்டையும் அடையமுடியாது இதற்கு மாறாக சமூகங்களிடையே ஒற்றுமையின்மையே நிலவும் சமஷ்டிக்கோரிக்கையை ஒத்திப்பேடுவதால் சமஷ்டிக்கொள்கையை பூரணமாகவிட்டுவிடுவது என்பதல்ல

சமஷ்டி அரசியல் அமைப்பைக் கோரும் சூழ்நிலை தற்போது நாட்டில் இல்லை எனவே மக்கள் இதைப் பற்றிச் சிந்திக்கத்தக்கஒருமைப்பாட்டுடனும் வெற்றியுடனும் இத்தகைய ஒரு அரசியல் அமைப்புக்கு வேலைசெய்யத்தக்க வேளை வரும்வரை இச் சமஷ்டிக் கோரிக்கையை ஒத்திப்போடவேண்டும்.

■ பிரித்தானிய ஆட்சி முறை சகல விதத்திலும் இலங்கைக்குப் பொருத்தமானது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சமஷ்டி அர

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கடத்தல் முயற்சியில் ஈடுபட்ட நபர்களைத்தாம்பிடித்துவிட்டதாகவும் விசாரணைக்குப் பொலிஸ் நிலையம் வரவேண்டுமென்றும் கூறிஇப் பெண்ணை அவர்கள் கடத்திச்சென்றனராம்,

எழுதுமட்டுவாளைச்சேர்ந்த கரம்பகம் பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப இளம் பெண்ணை எழுதுமட்டுவாள் வாசிகளான எஸ் சண்முகம் எஸ், செல்வராசா ஆகியோர் வீட்டில் யாருமில்லாத சமயம் அங்குசென்றுகடத்த முயன்றதாகவும் யுவதி சப்தம்வைத்ததைத் தொடர்ந்து அயலவர் ஓடிவரவே அவர்களிருவரும் ஓடிவிட்டதாகவும் இதனைத் தொடர்ந்து அடுத்த நாள் பெண்ணின் பெற்றோர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துவிட்டு பெண்ணை எழுதுமட்டுவாளில் தமது உறவினரிடம் விட்டிருந்ததாகவும் வீட்டிலுள்ள வயோதிபப் பெண்ணுடன் தமது மகளை விட்டுவிட்டுப் பெற்றோர் கோவி

அவர்களுடன்செல்லயுவதி மறுக்கவே பொலிஸாருடன் போக என்ன பயம்' எனக் கூறியுவதியை அவர்களுடன் அனுப்பிவைத்தாராம் அங்கிருந்த வயோதிபப் பெண்

யுவதியை அழைத்துவந்தவர்கள் ஜீப்வண்டி எழுதுமட்டுவாள் சந்தியில் நிற்பதாகக் கூறி அதுவரை ஒரு டிராக்டரில் ஏறச்செய்து கொண்டு போனதாகவும், யுவதி அழுது குளறியும் தப்பித்துக்கொள்ள முடியாது போனதாகவும் கூறப்பட்டது. தமது மகளைக்காணாது தேடிய பெற்றோர் மகளையும் சண்முகம் என்பவரையும் கிளிநொச்சியில் ஒரு வீட்டில் கண்டுபிடித்தனராம். பொலிசாருக்குக் கொடுத்ததகவலைத் தொடர்ந்து பளைப் பொலிசாரின் உதவியுடன் சாவகச்சேரிப் பொலிசார் இருவரையும் கைதுசெய்தனர்.

சண்முகம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். செல்வராசாவைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

## தி மு க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூசாரியைப் பற்றியது அல்ல சட்டத்தைப்பற்றியது தான் உத்திரப்பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சி உருவானது எவ்வளவு தவறான விளைவுகளை தரும் என்று அதனை விமர்சிக்கிறேமோ அதை போலவேதான் இந்தியா முழுமைக்கும் ஜனாதிபதி ஆட்சி வருவதில் உள்ள சங்கடத்தையும் அனைவரும் உணர்வார்கள்.

இது பற்றி பாராளுமன்ற தி மு க தலைவர் பேராசிரியர் அன்பழகன், துணைத் தலைவர் மனோகரன் மற்றும் உறுப்பினர்களோடு செயற்குழுவினரை நான் கலந்து பேசிய பிறகு முடிவு எதனையும் மேற் கொள்வேன்

முதல் மந்திரி கருணாநிதி தாம் அடுத்த தடவை டில்லிக்குச் செல்லும் போது திரு ராம் சுபாக்சிங்கை சந்தித்து இப் பிரச்னை பற்றி விவாதிக்கப் போவதாகவும் மாநிலங்களுக்கு அதிகபட்சமான அதிகாரங்கள் வழங்குவதற்கு இன்னும் எந்தெந்த அதிகாரங்கள் தேவை என்பதை பற்றி பேசப் போவதாகவும் கூறினர்.

கனிப்பொருள் ஆராய்ச்சி

## சீனநிபுணர் குழு வரும்

கொழும்பு சனி

நாட்டிலுள்ள கனிப்பொருள் வளங்களைக் கண்டுபிடித்து பயன்படுத்துவதற்கான விரிவான திட்டமொன்றைப்பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. இது சம்பந்தமாக இலங்கை அரசுக்கு ஆலோசனைகள் கூறவும், உதவிகள் புரியவும் சீனவிலிருந்து நிபுணர்கள் குழுவொன்று அழைக்கப்படும் என்று தெரிகின்றது. இது சம்பந்தமாக சீன அரசாங்கத்துடன் அண்மையில் வெளிவர்த்தக அமைச்சர் திரு டி. பி. இலங்கரத்ன சீனசென்ற பொழுது ஆலோசித்ததாகவும் தெரிகிறது.

## ஞாயிறை விடுமுறையாக்குக

— தஹா

கொழும்பு, சனி

போயா தினத்துடன் ஞாயிற்றுக்கிழமையையும் விடுமுறை தினமாக்கும்படி காலி எம். பி. டாக்டர் டபிள்யு தஹநாயக்கா ஆட்சிமன்றத்தில் பிரேரணை ஒன்று கொண்டுவந்தார்.

தனி அங்கத்தவர்கள் பிரேரணைகள் இன்று விவாதத்துக்கு எடுக்கப்பட்ட போதே இப்பிரேரணை கொண்டுவரப்பட்டது.

''வாரத்தில் 5 நாள் வேலைத் திட்டம் கொண்டுவரப்படவேண்டும்'' என தஹா வற்புறுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org